# அகிலம்

இந்த இதழில்:


- O மக்கள் யுத்தம் மறுபடியும் வென்றது!
  — கலாநிதி சி. சிவசேகரம்.
- O பழையன கழிதலும் புதியன புகுதலும்,
  — கலாநிதி. அ. சண்முகதாஸ்.
- O இலங்கையின் குடித்தொகைப் பண்புகள்,
  — கலாநிதி பொ. பாலசுந்தரம்பிள்ளை.
- O வங்காளதேசத்தின் தற்போதைய நிலை,
  — அ. சிவராசா, B. A. Hons (Cey)
- O தமிழ்நாடும் ஈழமும்: நிலாவெளிப்பிள்ளையார் கோவில் கல்வெட்டு
  — செல்லத்துரை குணசிங்கம், M. A. (Cey)
- O பாராளுமன்ற சனநாயகத்தில் எதிர்க்கட்சியின் பங்கு,
  — என். பீ. எம். சைபுதீன், B. A. Hons ( Cey )
- O உங்கள் கவனத்திற்கு...



2
ஏப்ரல்
மே
யூன் - 1975

விலை 1-50


ஒரு சமூக அறிவியல் முத்திங்கள் ஏடு

அகிலம்

ஏப்ரல் - யூன் 1975

சுற்று: 1 சுழற்சி: 2.

ஆசிரியர்:
இரா. சிவசந்திரன்,
B. A. Hons (Cey.)

இணை ஆசிரியர்:
செந்தில்வடிவேல்,
B. A. Hons (Cey.)

அகிலம் ஆண்டுச் சந்தா:
ரூபா 6-60
(தபாற்செலவு உட்பட)

முகவரி:
'ஆசிரியர்' அகிலம்
'மலரகம்' வேலணை — 2
(ஸ்ரீ லங்கா)

அச்சுப்பதிவு:
தாரணி அச்சகம்
வணை, வேலணை.

AKILAM
A Social Science Quarterly.

# மக்கள் யுத்தம் மறுபடியும் வென்றது.

நொம்பென் வீழ்ந்தது! சைகொன் வீழ்ந்தது! பத்திரிகைகள் இப்படித்தான் தலைப்புத் தந்தன. உண்மையில் வீழ்ந்துபட்டது சைகோனுமல்ல, நொம்பென்னுமல்ல.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிவருடி அரசாங்கங்கள் மக்கள் யுத்தத்தில் முடிவுகண்டன.

1970-இல் அமெரிக்கச் சதி மூலம் நொம்பென்னைக் கைப்பற்றிய லொன்நொல் ஆட்சியை இளவரசர் சிஹனுக் தலைமையில் திரண்ட ஃமெர் மக்கள் சக்தி முறியடித்தது. வியற்னும் யுத்தத்தை வெல்ல அதனை விஸ்தரிப்பதே வழியென எண்ணிக் காம்போஜ மக்கள்மீது யுத்தம் தொடுத்த அமெரிக்க ஏகாதிபத்தியமும், லொன்நொல் ஆட்சிக்கு நேற்றுவரை சாமரம் வீசிக்கொண்டிருந்தவர்களும் ஒன்றுபட்ட ஏகாதிபத்திய விரோத மக்கள் சக்தி முன் தலைகவிழ்ந்தனர். பிரெஞ்சுக் கொலனித்துவத்திற்கு எதிராக நூற்றுண்டுகாலம் போராடி ஜப்பானிய ஃபாஸிஸ (Fாஸிஸ) வாதிகளை 1945 இல் முறியடித்தவர்களும் ஏகாதிபத்தியவாதிகளின் துணையுடன் மீண்டும் நாட்டைப்

பிடித்த ஃபிரெஞ்சு ( Fரெஞ்ச் ) கொலனித்துவவாதிகளை 1954–இல் தோற்கடித்தவர்களும் — ஜெனிவாமகாநாட்டில் சமாதான உடன்படிக்கை செய்த வியற்னுமிய மக்களை ஏமாற்றி அந்த உடன்படிக்கையை அவமதித்து தற்காலிகமாக இரண்டாகப் பிரிக்கப்பட்டு 1956-ஆம் ஆண்டுத் தேர்தல்வரை ஃபிரெஞ்சு நிர்வாகத்தில் வைக்கப்பட்ட நாட்டின் தென்பகுதியைக் கைப்பற்றி அங்கு தமது பொம்மை அரசாங்கங்களை நிறுவி யுத்தத்தை உக்கிரப்படுத்திய ஐஸன்ஹோவர், கெனடி நிர்வாகங்களையும் குண்டுவீசி மக்களைப் பணிய வைக்கலாமென்று கனவு கண்ட ஜோன்ஸன், நிக்ஸன் நிர்வாகங்களையும் எதிர்த்து நின்று வெற்றிகண்டவர்களுமான வியற்னும் மக்கள் ஃபோட் ( CFாட் ) நிர்வாகத்தின்கீழ் தமது வெற்றிக்குச் சிகரம் வைத்தனர். 1975 மே தினம் பெருமிதத்துடன் மலர்ந்தது. இந்தோசீன மக்கள் கண்ட வெற்றி எதனைக்குறிக்கின்றது?

மக்களே வரலாற்றை நிர்ணயிக்கும் பிரதான சக்தி; மக்கள் ஒன்றுபட்டு நீடித்த ஆயுதமேந்திய போராட்டத்தில் ஈடுபட்டால் ஏகாதிபத்தியமும் சகல பிற்போக்குச் சக்திகளும் அவர்கட்கு ஈடு கொடுக்க முடியாது; ஆயுதங்களும் அந்நிய உதவியும் பயனுள்ளவை ஆனல் முதன்மையானவை இல்லை மக்களது பலமே அடிப்படையானது. அது இருந்தால் எதிரியுடைய ஆயுதங்களையும் மக்களே பறித்தெடுத்துப் பிரயோகிக்க முடியும், ஏகாதிபத்தியத்துக்கு சமாதானத்தின் மொழி புரியாது — அது யுத்தத்தின் மொழியிலேயே பேசுகிறது— ஆனல் இது கூறும் எதிர்காலம் என்ன?

இந்த யுத்தத்தின் வெற்றியின் விளைவுகள் மூன்ரும் உலகம் பெருவல்லரசுகட்கெதிராக நடத்தும் போராட்டத்திற்கும், ஏகாதிபத்தியவிரோத சக்திகளது போராட்ட ஒற்றுமைக்கும் அளித்துள்ள பங்கு பிரமாண்டமானது. வெற்றி வியற்னும் மக்கட்கும் மூன்ரும் உலக மக்கட்கும் மட்டுமல்ல, அமெரிக்க மக்களுக்கும்தான்.

இத்துடன் ஏகாதிபத்தியம் முடிந்துவிடவில்லை. ஏகாதிபத்தியம் தொடர்ந்தும் மக்களைச் சுரண்டிக்கொண்டுதான் இருக்கும். எனவே அதற்கெதிரான போராட்டம் தொடரத்தான்வேண்டும். காம்போஜத்துள்ளும், வியற்னுமினுள்ளும் போராட்டம் இன்னும் முடிந்துவிடவில்லை. ஏகாதிபத்தியத்தின் மிச்ச சொச்சங்கள், நாற்றமெடுக்கும் பழைய சிந்தனைகள், பழக்கவழக்கங்கள் இவையெல்லாம் நாட்பொழுதில் முடிவன அல்ல, புதிய வியற்னுமும், காம்போஜமும் இன்றுதான் பிறந்துள்ளன.

வியற்னும் மீண்டும் பழையபடி ஒன்றுபட்டு பூரணமான புதிய சமுதாயமாக விரைவில் மலர்வதாக!
காம்போஜமும் விரைவில் நவகம்போஜமாக மாறுவதாக!
எமக்கும்கூட எதிர்காலம் பிரகாசமானது. ஏனென்ருல், எதிரி தினம் தினம் தேய்ந்து கொண்டிருக்கிருன்.

---

. கலாநிதி சி. சிவசேகரம்,
எந்திரவியற்பீடம். இலங்கைப்பல்கலைக் கழகம், பேராதனை வளாகம்.

# பழையன கழிதலும் புதியன புகுதலும்

கலாநிதி அ. சண்முகதாஸ்

உலகிலேயுள்ள பல மொழிகளைப் போல, தமிழ் மொழியும் 'இரு வழக்கு' (Diglossia) உடைய மொழியாகும், தமிழில் 'எழுத்து வழக்கு' சில விசேட சந்தர்ப்பங்களுக்கு உரியதாக அமைகின்றது. அதே போன்று 'பேச்சு வழக்கு'ம் சில விசேட சந்தர்ப்பங்களில் உபயோகிக்கப்படுகின்றது. பின்வரும் அட்டவணை இவ்விசேட சந்தர்ப்பங்களை விளக்குகின்றது.

| சந்தர்ப்பங்கள் | பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
|---|---|---|
| 1. உறவினர், நண்பர் ஆகியோருடன் உரையாடல் | X | |
| 2. விரிவுரை; சமய இலக்கியச் சொற்பொழிவுகள் | | X |
| 3. கடிதம் : படித்தவர்கள் | | X |
| படியாதவர்கள் | X | |
| 4. பத்திரிகை, சஞ்சிகை ஆகியவற்றில் கட்டுரை, ஆசிரியர் தலையங்கம், செய்திகள் | | X |
| 5. வானெலியில்: செய்திகள் தொகுப்பாளர் அறிவிப்பு | | X |
| சில கிராமிய நிகழ்ச்சிகள் சமூக நாடகங்கள் | X | |
| 6. தற்காலச் சிறுகதை, கவிதை, நாவல், நாடகம் | X | X |
| 7. அரசாங்க வர்த்தமானி விளம்பரம் முதலியன. | | X |

இவ்வாறு இரு வழக்குக் கொண்ட தமிழ் மொழிக்கு எழுத்து வழக்கு இலக்கணமே மரபு மரபாகப் போற்றப்பட்டு வந்துள்ளது. பேச்சு வழ்க்குக்கு இன்னும் எவராவது விரிவான இலக்கணம் எழுதியதாகத் தெரியவில்லை. எழுத்து வழக்கு இலக்கணத்திலுங்கூட எத்தனையோ பழைய விதிகள் தற்கால எழுத்து வழக்குக்குப் பிரயோசன மற்றனவாகவும், எத்தனையோ புதிய இலக்கண விதிகள் அமைக்கப் பட வேண்டிய அவசியமுடையதாகவும் உள்ளது.

தமிழ் ஒலிகளின் பிறப்புப் பற்றித் தமிழ் இலக்கணகாரர் கூறியவற்றைத் தற்கால ஒலியியற் கருத்துக்களின் அடிப்படையிலும், ஒலியியற் கருவிகளின் உதவியுடனும் மீளாய்வு செய்யும்போது, அவற்றில் எத்தனையோ திருத்தங்கள் செய்யவேண்டியிருக்கும். உதாரணத்துக்குக் குற்றியலுகரம் பற்றித் தமிழ் இலக்கணகாரர் கூறியுள்ள விளக்கத்தினை நோக்குவோம். நுனிநாசிறிது மேலே ஏழ, வாயிதழ்கள் இரண்டும் குவிய உகர ஒலி பிறக்கின்றது. குற்றியலுகரம் இதழ் குவியாமல் பிறக்கின்ற ஒலி என்பதைத் தொல்காப்பிய இரண்டாஞ் சூத்திரத்துக்குக் கணேசையர் எழுதியுள்ள விளக்கத்தின்மூலம் தெளிவாகின்றது.

> " காது என்னுஞ் சொல்லை இதழ் குவித்துச் சொல்லுமிடத்து முற்றியலுகரமாம். அதற்குப் பொருள் கொல் என்பது. அதனை இதழ் குவியாமற் சொல்லுமிடத்துக் குற்றியலுகரமாம் அதற்குப் பொருள் காது என்னும் உறுப்பு "

இனி, குற்றியலுகரம் இடம்பெறுஞ் சந்தர்ப்பம் பற்றி ஆறுமுகநாவலர் இலக்கணச் சுருக்கத்திலே கூறுவதாவது;

> " குற்றியலுகரமாவது, தனிக்குற்றெழுத்தல்லாத மற்றையெழுத்துக்களுக்குப் பின்னே மொழிகளினிறுதியில் வல்லின மெய்களில் ஏறி நிற்கும் உகரமாம் "

இவ்விலக்கணத்திலே மூன்று விடயங்களை நாம் நோக்கவேண்டும். அதாவது, குற்றியலுகரம் இடம்பெறும் இடங்களாவன:

( அ ) தனிக்குற்றெழுத்தல்லாத மற்றையெழுத்துக்களுக்குப் பின்.
( ஆ ) மொழிகளின் இறுதியில்.
( இ ) வல்லின மெய்களில் ஏறி நிற்பது.

ஒலியியலிலே பயிற்சி பெற்றவர் எவரும் தற்காலத்தில் ஆசிரியர்களோ மாணவர்களோ உகரம் உச்சரிப்பதை அவதானிப்பின், மேற்குறிப்பிட்ட மூன்று சந்தர்ப்பங்களும் தற்கால வழக்குக்குப் பொருத்தமான இலக்கணமாகா என்பதனை உணருவர். வேண்டுமென்று வலிந்து உச்சரியாமல், சாதாரண உங்கள் உச்சரிப்பின் மூலம்பின் வருஞ் சொற்களைக் கூறிப்பாருங்கள் :—

( அ ) பசு, எடு, அறு, இது.
( ஆ ) கடுமை, மெதுமை, பசுமை
( இ ) எண்ணு, இரு, தள்ளு

( அ ) பகுதியில் இடம்பெறும் உதாரணங்களில் உள்ள சொற்களில் உகரம் தனிக்குற்றெழுத்துக்குப் பின் வந்துள்ளன. ( ஆ ) பகுதியிலே உள்ளனவற்றில் மொழியின் நடுவிலே உகரம் இடம் பெறுகின்றது. ( இ ) பகுதியில் இடம் பெற்றுள்ள சொற்களிலே வல்லினம் அல்லாத மெய் எழுத்துக்களிலே உகரம்ஏறி வந்துள்ளது. இவை யாவற்றிலும் இடம்பெறும் உகரம் இதழ் குவியாமலே உச்சரிக்கப்படுவதை நான் ஒவ்வொரு நாளும் அவதானிக்கக் கூடியதாயிருக்கின்றது. நீங்களும் அவ்வாறு அவதானித்து, நான் கூறுவது சரியெனக் கொண்டால், குற்றியலுகரம் பற்றிய பழைய இலக்கண விதி இக்காலத்துக்கேற்ப மாற்றியமைக்கப்பட வேண்டுமென ஏற்றுக் கொள்வீர்களல்லவா?

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் 'இலக்கிய வழி' என்னும் நூலில் பின்வரும தொடர்கள் இடம்பெறுகின்றன:—

1. " நாவலப்பிட்டி வழியாகக் குயின்ஸ் பெரித் தோட்டத்துக்குப் போய்........."
2. " இனி நிறுத்துங்கள் ' பஸ் ' வண்டியை......"
3. " பரஸ்பரங் காதலுடையவர்களாயிருந்தார்கள் "
4. " 1868 செட்டம்பரில் ......"
5. " 1895 ஆம் ஆண்டில் ' ரூவ்பகதூர் ' என்கின்ற கண்ணியப் பட்டமும்......"
6. " ஹைக்கோர்ட் நீதிபதிகள்......"
7. " எலியற், லஷ்சிங்டன் ......"
8. " டாக்டர் சாமிநாதையர்......"
9. " றிறிற்றே......"

மேற்காணும் தொடர்களிலே கோடிட்டப்பட்ட சொற்கள் தமிழ் இலக்கணகாரர் ( நன்னூலார் தொடக்கம் ஆறுமுகநாவலர் வரை ) மொழிக்கு முதல், இடை, கடையிலே இடம்பெறும் எழுத்துக்கள் பற்றிக் கூறிய இலக்கண விதிகளை மீறுவனவாக அமைந்துள்ளன. டா ( டாக்டர் ), ல ( லஷ்சிங்டன் ) ரு ( ரூவ்பகதூர் ), ஹை ( ஹைக்கோர்ட் ) ஆகியன தமிழ் இலக்கண விதியின்படி மொழிக்கு முதலிலே இடம்பெறமாட்டா. ஆனால் இக்கால எழுத்து வழக்கிலே இவைபோன்று இலக்கண வரம்பு மீறும் எத்தனையோ எழுத்துக்கள் மொழிக்கு முதலில் இடம் பெறுகின்றன. ன்ஸ், ஸ்ப், ப்ட், வ்ப், ர்ட், ர்ச், ஷ்ச், ங்ட், க்ட் ஆகிய இடைநிலை மெய் மயக்கங்

களும், ஸ், ட், ற், ஞ ஆகிய கடைநிலை எழுத்துக்களும் இலக்கண வரம்பு மீறுவனவேயாகும். ஆகவே, தமிழ் இலக்கணகாரர் மொழிக்கு முதல், இடை, கடை ஆகிய இடங்களிலே இடம்பெறும் எழுத்துக்கள் பற்றிக் கூறிய இலக்கண விதிகள் இக்கால எழுத்து வழக்குக்குப் பொருத்துவனவாக இல்லை. அவ்விதிக்ள் தற்காலத்துக்கேற்றபடி மாற்றியமைக்கப்படவேண்டும்.

முதலிலே நிற்குஞ் சொல்லின் இறுதி எழுத்தும் அடுத்து வருஞ் சொல்லின் முதல் எழுத்தும் புணருவது பற்றித் தமிழ் இலக்கணகாரர் பல விதிகள் வகுத்துள்ளனர். ஆனால் இவ்விதிகள் இக்கால எழுத்து வழக்கிலே மீறப்பட்டும் மறக்கப்பட்டும் வருகின்றன. இவ்வெழுத்து வழக்கினை உபயோகிப்பவர் இவ் விதிகளை அறியாதவர்களல்ல. எனினும் அவர்கள் இவற்றை மீறுவதற்குக் காரணம் அவை தற்காலத்திலே தேவையின்மையேயாகும்' உதாரணமாகப் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையின் தமிழின் மறுமலர்ச்சி என்னும் நூலிலிருந்து சில சான்றுதாரங்களை நோக்குவோம்.

1. " பாராட்டினால் போதும்......"

2. " தமிழுக்கு முழு முதல் — தன்மை......"

இவ்விரு தொடர்களிலும் லகர ஈற்றினை அடுத்து இடம்பெறும் வல்லின மெய்களாகிய ப், த், என்பனவற்றால் அத் தொடர்கள் பாராட்டினாற் போதும், முதற்றன்மை என்று அமையவேண்டும். இக்கால எழுத்து வழக்கு இத்தகைய புணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. பழையன கழிதலில் குற்றமில்லையல்லவா?

" மக்களுக்கு இருத்தலாகாது " என்ற தொடர் மக்களுக்கிருத்தலாகாது என்று அமையவேண்டும். ஏனெனில், தமிழ் இலக்கண விதிப்படி, மக்களுக்கு என்ற சொல்லில் உள்ள இறுதி உகரம் குற்றுகரமாகும். இக்குற்றுகரம், அடுத்து வருஞ் சொல்லின் முதல் எழுத்து உயிர் ஆகில் மறைந்து விடும் என்பது இலக்கண விதி: " உயிர் வரின் உக்குறள் மெய்விட்டோடும் " ( நன்னூல், சூத். 164 ) ஓலையிலே எழுத்தாணி கொண்டு எழுதும் வழக்கினால் அதிக எழுத்துக்களை எழுதிக் காலத்தையும் இடத்தையும் விரயஞ் செய்ய விரும்பாத காலகட்டத்திலும், எழுத்துக்களை எண்ணிச் செய்யுள் அமைக்கும் வித்தை வழக்கிலிருந்த காலத்திலும் இது போன்ற விதிகள் பயனுடையனவாகவும் முக்கியத்துவம் பெற்றனவாகவும் இருந்தன. அச்சுயந்திர வசதியும், புதுப்புது மோடிகளிலே கவிதை புனையும் ஆர்வமும் உள்ள இக்காலத்திலே இவ்விதிகள் முக்கியத்துவம் இழப்பது ஆச்சரியமில்லை.



சொல்லினைத் தமிழ் இலக்கணகாரர் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வட சொல் என்று நான்காகப் பாகுபடுத்தியுள்ளனர். இன்று இப்பாகுபாடு எவ்வளவுக்குப் பொருத்தமானது என்பதும் நோக்கவேண்டியுள்ளது. இ ய ற் சொ ல் என்பது " செந்தமிழ் நிலத்து மொழியாகி, திரிசொற் போலாகாது கற்றோருக்கும் கல்லாதோருக்கும் ஒப்பந்தம் பொருளை விளக்குந் தன்மையையுடைய உலக வழக்கே " ( நன். சூத். 271 உரை ), திரிசொல் என்பது, " ஒரு பொருளைக் கருதிய பல சொற்களாயும், பல பொருள்களைக் கருதிய ஒரு சொல்லாயும் அரிதாகக் கற்றோர் அறியும் பொருளனவாய் வருவன " ( நன். சூத். 272 உரை) என்று கூறப்பட்டுள்ளன. நன்னூற் சூத்திரங்களுக்கு உரை வகுத்தவர் பொன் என்னுஞ் சொல்லினை இயற்சொல் என்று குறிப்பிட்டுள்ளார்.

பொன்னை உருக்கினான்.

என்னும் வாக்கியத்தில் பொன் என்னுஞ் சொல் கட்டியான தங்கத்தைக் குறிக்கின்றது.

பொன் அணிந்தான்

என்னும் வாக்கியத்தில் அச்சொல் பொன்னாலான அணியைக் குறிக்கின்றது. ஆகவே இச்சொல் இயற்சொல்லா அல்லது திரிசொல்லா? பொன் என்னுஞ் சொல்லின் செயற்பாட்டு மதிப்பீட்டினைக் கருதாது, அதனை இயற்சொல் என்று பாகுபடுத்தியுள்ளனர். மேலும், இயற்சொல், திரிசொல் என்ற பாகுபாடு இக்காலத்துக்கு அவசியமா என்ற பாகுபாடு இக்காலத்துக்கு அவசியமா என்ற வினாவுக்கு விடையென்ன? கற்றோருக்கும் கல்லாதோருக்கும் ஒப்ப விளங்கக் கூடிய சொற்கள், அரிதாகக் கற்றோர் அறியுஞ் சொற்கள் என்று இக்காலத்திலே பாகுபடுத்துவதாயின் இரண்டு வகையான அகராதிகள் இயற்றப்படவேண்டும். ஒன்று இயற்சொல்லகராதி, மற்றையது திரி சொல்லகராதி, அவ்வாறன்றி, தமிழிலுள்ள சொற்களஞ்சியம் எல்லாம் உள்ளடக்கியதாகவே தற்கால அகராதிகள் அமைகின்றன. கற்றோர் குறைவாகவும் கல்லாதோர் பலவாகவும் இருந்த. ஒரு காலகட்டத்தில் இப்பாகுபாடு பொருத்தமுடையதாக இருந்திருககலாம். இப்பொழுது நிலைமை அப்படியில்லை.

எனினும் திரிசொல் என்னும் பாகுபாடு இக்கால எழுத்து வழக்கில் புதிய பொருளிலே பேணக்கூடியதாக உள்ளது. உயிரியல், மருத்துவம், பொறியியல், பௌதிகம், இராசாயனம், அளவையியல். மொழியியல் போன்ற துறைகளைச் சேர்ந்த நூல்கள் தமிழிலே மொழிபெயர்க்கப்படுவதாலும், தமிழ் மொழி மூலம் இத்துறைகளை மாணவர்கள் இப்பொழுது கற்பதாலும், எத்தனையோ புதிய கலைச் சொற்கள் எமது மொழியிற் சேர்கின்றன. ஏற்கெனவே எம் மொழி

யிலிருந்த கலைச் சொற்களும், புதிதாகச் சேர்வனவும் எக்காலத்திலும் பொருளிலே திரிபடையாதனவாக அமையக்கூடியன. அத்தகைய சொற்களை கலைச்சொல் என்ற பாகுபாட்டிலும், ஏனைய தமிழ்ச் சொற்களைத் திரிசொல் என்னும் பாகுபாட்டிலும் அடக்கலாம்.

ஒரு காலத்திலே தமிழில் இடம்பெற்ற பிறமொழிச் சொற்களில் வடமொழிச் சொற்களே பெரும்பாலன. அதனால் வடசொல் என்ற பாகுபாடும், அவையல்லாத ஏனைய சொற்கள் அடங்கிய திசைச்சொல் என்ற பாகுபாடும் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் இப்பொழுது தமிழ் மொழி எத்தனையோ நவீன மொழிகளுடன் தொடர்பு கொண்டு, அவற்றிடமிருந்து பல சொற்களைக் கடன் வாங்கிவிட்டது. ஆகவே, தற்காலத்தில் நாம் வடமொழிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், பல சொற்களை எமக்குக் கடனாகத் தந்துதவிய மொழிகளை நாம் மறந்துவிடக்கூடாது. ஆகவே, தற்கால எழுத்து வழக்கினை நோக்குமிடத்து, அதற்கு அமைக்கப்படும் இலக்கணம் தமிழ்ச் சொற்களை தன்சொல் (இதனை மேலும் கலைச்சொல், திரிசொல் என்றும் பாகுபடுத்தலாம்) என்றும் பிறசொல் என்றும் பாகுபாடு செய்தலே பொருத்தமாக அமையலாம்.

---

# இலங்கையின் குடித்தொகைப் பண்புகள்

கலாநிதி. பொ. பாலசுந்தரம்பிள்ளை

குடித்தொகைக் கூட்டில் வயது, பால், இனம். மதம் எழுத்தறிவு, விவாக அந்தஸ்து, தொழில், வேலை போன்ற விபரங்கள் உள்ளடக்கப்படுகின்றன. 1971—ஆம் ஆண்டுக் கணிப்பின்படி 6525948 ஆண்களும் 6185195 பெண்களும் இருந்தனர். பெண்களிலும் பார்க்க ஆண்களின் தொகை அதிகமாக இருந்தது. ஒவ்வொரு 100 பெண்களுக்கும் 104.6 ஆண்கள் இருந்தனர். ஆண் — பெண் விகிதாசார வேறுபாடு 1871—ஆம் ஆண்டு குடிக்கணிப்பிலிருந்து காணக்கூடியதாகவுள்ளது. கிராமிய குடித்தொகையில் ஆண்கள் 51 விகிதமாகவும் பெண்கள் 49 விகிதமாக இருக்க, நகரக் குடித்தொகையில் ஆண்கள் 52·9 விகிதமாகவும், பெண்கள் 47·1 விகிதமாக இருந்தனர். இலங்கையில் வவுனியா, பொலன்னறுவை, அனுராதபுரம், திருகோணமலை



போன்ற அபிவிருத்தியடைந்து வரும் மாவட்டங்களில் ஆண் — பெண் விகிதாசார வேறுபாடு ஆண் சார்பாக மிகவும் கூடுதலாகவுள்ளது. ஆண்கள் பெண்களிலும் கூடுதலாக இருப்பதற்கு ஒரு காரணம் பிறப்பில் ஆண்கள் கூடுதலாக பிறப்பதே. ஒவ்வொரு 1000 பெண் குழந்தைகளுக்கு 1030—40 ஆண் குழந்தைகள் பிறக்கின்றன. எனினும் ஆண் குழந்தைகளின் இறப்பு விகிதம் பெண் குழந்தைகளின் இறப்பு விகிதத்திலும் பார்க்கக் கூடுதலாகும். பெண்கள் மத்தியில் பிரசவ இறப்பும் இன்னுமொரு காரணம். மேலும் இலங்கையில் பெண்களைப் பொறுத்தவரையில், அவர்களின் இறப்பு விகிதம் எல்லா வயதிலும் ஆண்களை விடக் கூடுதலாக இருக்கிறது. பெண்கள் ஆண்களிலும் குறைவான உணவை உட்கொள்வதினால் நோய் வாய்ப்படுவதும், பிரசவமரணமும், சமூகத்தில் ஆண்கள் கூடிய முக்கியத்துவம் வகிப்பதும் இதற்குக் காரணங்களாகும்.

### வயது அமைப்பு

1971—இல் வயது அமைப்பை நோக்கின் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் 54.3 விகிதமாகவும், 18 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள் 45.7 விகிதமாகவுமுள்ளனர். 1969/70—ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட சமூக — பொருளாதாரக் கணிப்பின்படி வயது அடிப்படையில் குடிசனப்பரம்பல் பின்வருமாறு:

அட்டவணை (i)

| வயது பிரிவு | குடித்தொகை விதம் (ஆயிரத்தில்) | வீதம் |
|---|---|---|
| 0—14 | 4831·1 | 39.3 |
| 15—24 | 2609.7 | 21.2 |
| 25—34 | 1502.9 | 12.2 |
| 35—44 | 1224.9 | 10.0 |
| 45—54 | 968.1 | 7.9 |
| 55—64 | 613.1 | 5.0 |
| 65 அதன்மேலும் | 547.7 | 4.4 |
| | 12297.5 | 100 |

(மூலம்:- 1969/70 சமூக பொருளாதாரக் கணிப்பு.)

இலங்கையின் வயதமைப்பு கூடுதலாக இளவயதுப் பிரிவினரைக் கொண்டதாக விருக்கின்றது. மொத்த குடித்தொகையில் 60.5 விகித மக்கள் 24 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்கின்றார்கள். இத்தகைய வயது பிரமிட்டில், தங்கி வாழ்வோர் விகிதாசாரம் அதிகமாக இருப்பதுடன் அரசாங்கத்தின் சமூகச் செலவினங்களும் கூடுதலாக இருப்பதினால் முதலீட்டுத்துறைக்கு அதிக பணம் ஒதுக்க முடியாதுள்ளது.

**இனமும் மதமும்:**

இலங்கை ஒரு பல இன, மத மக்கள் வாழும் நாடாகும். இன அடிப்படையில் மக்களின் விகிதாசாரம் பின்வருமாறு:— கரையோரச் சிங்களவர் 42·8 %. கண்டிச் சிங்களவர் 29·1 % இலங்கைத் தமிழர் 11·1 %. இந்தியத் தமிழர் 9·4 % இலங்கைச் சோனகர் 0·5 %. இந்தியச் சோனகர் 0·2 % பறங்கியர் 0·2 %. மலாயர் 9·3 % ஏனையவர்கள் 0·1 % கரையோரச் சிங்களவர், இலங்கைத் தமிழர் ஆகியவர்களின் விகிதாசாரம் குறைந்து வருவதையும் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. காலி, மாத்தறை, அம்பாந்தோட்டையில் கரையோரச் சிங்களவரும், யாழ்ப்பாணத்தில் இலங்கைத் தமிழரும் குடித்தொகையில் 90 % இதத்திற்கு மேலுள்ளனர். அம்பாறை, திருக்கோணமலை ஆகிய மாவிட்டங்களைத் தவிர ஏனைய மாவிட்டங்களில் ஏதாவதொரு இனம் 50 விகிதத்திற்கு மேல் வாழ்கின்றார்கள். கடந்த 25 வருடங்களாக இனப்பாம்பலில் ஏற்பட்ட முக்கியமான இயல்பு என்னவெனில் எல்லா மாவிட்டங்களிலும் பல இன மக்கள் வாழும் இயல்பு அதிகரித்து வருவதைக் காணலாம். இலங்கைத்தமிழர் வடக்கு, கிழக்கு மாகாண மாவட்டங்களில் குடித்தொகை விகிதாசாரத்தில் குறைவடைந்து போவதையும், சிங்களப் பகுதி மாவட்டங்களில் அதிகரித்தும் இருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது இதே மாதிரி சிங்களவரின் குடித்தொகை விகிதாசாரம் வடகிழக்கு மாகாணங்களில் அதிகரித்து வருவதையும் காணலாம்.

மதப் பரம்பலை நோக்கும் பொழுது பௌத்தர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், நுவரெலியா மாவட்டத்திலும், மன்னார் தொடக்கம் — மொறட்டுவை வரை இடைப்பட்ட மேற்கு கரையோரப் பகுதி தவிர ஏனைய பகுதிகளிலும் பெரும்பான்மையாக வாழ்கின்றார்கள். இந்துக்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா நுவரெலியா ஆகிய மாவிட்டங்களில் பெரும்பான்மையாகவும், பதுளை, திருக்கோணமலை, அம்பாறை, மன்னார் ஆகிய மாவட்டங்களில் 20-35 விகிதத்திற்கு இடைப்பட்டும் காணப்படுகின்றனர். இஸ்லாமியர் நாடு முழுவதும் பரவி காணப்படினும் கிழக்கு மாகாணத்திலும், நகர்ப்புறங்களிலும் இவர்களது செல்வாக்கு குறிப்பிடத்தக்கது. உரோமன் கத்தோலிக்கர் மன்னார்பகுதி, சிலாபம் — கொழும்புக்கு இடைப்பட்ட கரையோரப்பகுதிகளில் பெரும்பான்மையினராக வாழ்கின்றனர்.

**எழுத்தறிவு**

எழுத்தறிவு இலங்கையிற் கூடுதலாகக் காணப்படுகின்றபொழுதும், பால், இன, மத, கிராம — நகர அடிப்படையில் இதன் வேறுபாடுகளைக் காணக்கூடியதாகவுள்ளது. 1963—ஆம் ஆண்டு புள்ளி விபரத்தின்படி 5 வயதுக்கு மேற்பட்டவர்களில் 79·2 ஆகவும், பெண்களின் 63.2 வீதமும் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாகும். 1969/70 ஆம் ஆண்டுக் கணிப்பின்படி 10 வயதுக்கு மேற்பட்டவர்களில் 82.6 வீதத்தினர் எழுத வாசிக்க தெரிந்தவர்களாகும். இதில் ஆண்களின் வீதாசாரம் 89·7 ஆகவும் பெண்களின் வீதாசாரம் 75.4 வீதாசாரமாகவும் இருந்தது. எழுத வாசிக்கத் தெரிந்தவர்களின் வீதாசாரம் நகர்களில் 88·7 வீதம், கிராமங்களில் 84·3 வீதம், தோட்டங்களில் 61·2 வீதமாகவும் இருந்தது. எழுத்தறிவு குறைந்த மாவட்டங்களில் 1963 கணிப்பின்படி பின்வருமாறு மொனறாகலை 37.6 வீதம் அம்பாறை 40·8 வீதம், நுவரெலியா 40·0 வீதம், பதுளை 40·7 வீதம், கண்டி 48·5 வீதம், கொழும்பு 80.6 வீதம், யாழ்ப்பாணம் 75·5 வீதம் எழுத்தறிவிற் கூடிய மாவட்டங்களாகும். எல்லா மாவட்டங்களிலும் நகரமக்கள் கிராம மக்களிலும் பார்க்கக் கூடுதலாக எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாக இருக்கின்றார்கள். இதற்குப் புறநடையாக அம்பாறை மாவட்டத்தில் கிராமமக்கள் நகரத்தவர்களிலும் பார்க்க எழுத்தறிவில் கூடுதலாகவுள்ளனர். இன அடிப்படையில் நோக்கின் கரையோரச் சிங்களவர் 78·8 வீதம், கண்டிச்சிங்களவர் 68·2 வீதம், இலங்கைத் தமிழர் 76·7 வீதம், இந்தியத்தமிழர் 61·6 வீதம், இலங்கைச் சோனகர் 72·7 வீதம், பறங்கியர் 93 வீதம், மலாயர் 80·2 வீதம் ஏனையவர்கள் 81·2 வீதம் எழுத வாசிக்க தெரிந்தவர்களாக இருக்கின்றார்கள்.



**விவாக அந்தஸ்து:**

விவாக அந்தஸ்து என்னும் பொழுது விவாகம் செய்யாதவர்கள், விவாக மானவர்கள், தாரமிழந்தோர், திருமண நீக்கம் செய்தவர்கள், பிரிந்து வாழ்வோர் பற்றிய விபரங்களை உள்ளடக்கியதாகும். இலங்கையில் இஸ்லாம் மதத்தினரைத் தவிர ஏனையவர்களுக்கு ஒரு தாரமணமே சட்டபூர்வமானது. எனினும் இன்று இஸ்லாமியர் மத்தியில் பல தாரமணம் முக்கியமானதாகவில்லை. திருமணம் ஒழுங்குபடுத்துவதில் பெற்றோர் வகித்த முக்கிய பங்கு சமூகமாற்றங்களின் விளைவால் குறைவடைந்த பொழுதும், அது இன்னும் முக்கியமானதாகவே இருக்கிறதெனலாம். விவாக நிச்சயதார்த்தத்தில் சாதி, சமயம், இனம், சீதனம், சாதகப் பொருத்தம் போன்ற விபரங்கள் பார்ப்பது இன்னும் நடைமுறையில் இருந்து வருகின்றன. சில சமூகங்கள் மத்தியில் குறிப்பாக இலங்கைத் தமிழர் மத்தியில் இதன் செல்வாக்குப் பலமாகவுள்ளது. அட்டவணை 2-ல் பால், விவாக அந்தஸ்து அடிப்படையில் குடிசனப் பாகுபாடும் அட்டவணை 3—ல் வயது அடிப்படையில் விவாக அந்தஸ்தும் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 2.

பால், விவாக அந்தஸ்து அடிப்படையில் குடிசனப்பாகுபாடு 1969/70 (நூற்று வீதத்தில்)

| | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| இன்னும் விவாகம் செய்யாதவர்கள் | 64·3 | 58·9 | 61·3 |
| விவாகமானோர் | 33·6 | 34·9 | 34·6 |
| தாரமிழந்தோர் | 1·7 | 5·2 | 3·4 |
| திருமண நீக்கம் செய்தோர் | 0·1 | 0·2 | 0·2 |
| பிரிந்து வாழ்வோர் | 0·3 | 0·8 | 0 5 |
| | 100 | 100 | 100 |

அட்டவணை 3.

வயது அடிப்படையில் விவாக அந்தஸ்து 1969/70 (நூற்று வீதத்தில்)

| வயதுப்பிரிவு | இன்னும் விவாகமாக தவர்கள் | விவாகமானோர் | தாரமிழந்தோர், திருமண நீக்கம் செய்தோர், பிரிந்து வாழ்வோர். |
|---|---|---|---|
| 10–14 | 37·3 | 0·8 | 0·3 |
| 15–24 | 49·3 | 9·6 | 2·6 |
| 25–34 | 9·3 | 25·1 | 7·1 |
| 35–44 | 1·7 | 26·0 | 10·1 |
| 45–54 | 0.7 | 19·9 | 19.7 |
| 55–64 | 0·5 | 11·7 | 20·2 |
| 65 உம்அதற்குமேலும் | 0·6 | 1·6 | 40·1 |
| | 100 | 100 | 100 |

மூலம்:— சமூக பொருளாதார கணிப்பு 1969/70

இலங்கையில் விவாக வயது உயர்வாக இருப்பது அவதானிக்கக் கூடிய முக்கிய அம்சமாக உள்ளது.



கருவளம்.

கருவளம் என்னும் பொழுது மொத்த உயிர் பிறப்புக்களையே கருதுவதாகும். கருவளமாதிரியைப் பல காரணிகள் செல்வாக்குப் படுத்துகின்றன. ஒரு நாட்டின் அல்லது சமூகத்தின் பால் விகிதாசாரம், வயதமைப்பு, விவாகவயது, இன்னும் விவாகமாக இருக்கும் காலவளவு போன்றனவும், சமூகத்தில் குடும்பளவு குறித்துக் கொண்டுள்ள கருத்தும், செயற்கையாகக் கருத்தடைமுறைகள் பற்றிய அறிவும், பாவனையும் ஆகியனவற்றால் கருவள மாதிரி செல்வாக்குக்குட்படுத்தப்படுகின்றது. இலங்கையில் சராசரி ஆண்டொன்றிற்கு 1000 பேருக்கு 1940-ஆம் ஆண்டுக்காலங்களில் 35–40 பிறப்புக்களும், 1950—ஆம் ஆண்டுகளில் 30-35 பிறப்புக்களும், 1960—ஆம் ஆண்டுக்காலங்களில் 25-30 பிறப்புக்களும் இடம்பெற்றன. 1973—ஆம் ஆண்டு பிறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 21·1 ஆக குறைந்துள்ளது- இன அடிப்படையில் பார்க்கும் பொழுது 1973—ல் 1000 பேருக்கு சிங்களவரின் 22·8, இலங்கைத்தமிழர் 23·2, இந்தியத்தமிழர் 14·0, இலங்கைச் சோனகர் 29·9, மலாயர் 18·7, யுரோசியர் 10·1, ஏனையவர்கள் 15·0, ஆக பிறப்பளவைக் கொண்டிருந்தனர். மோனப் பிறப்பு அளவு 1000 பிறப்புக்களில் 40–50 பிறப்புவரையில் காணப்படுகின்றன.

உயிர்பிறப்பு வரிசை அடிப்படையில் மிகக் கூடுதலான குழந்தைகள் 20–29 வயதுப் பிரிவு தாய்களுக்கு பிறந்துள்ளன. விவாக வயது உயர்வாக இருப்பதால் கருவளக்காலம் இலங்கையில் நீண்டதாகவுள்ளது. 43·5 விகிதமான குழந்தைகள் முதலாவது, இரண்டாவது குழந்தைகளாக இருக்கின்றன. வேற்றுமை வளம் என்னும் பொழுது கல்வி, வருமானம், தொழில், சாதி, சமயம் அடிப்படையில் குழ்ந்தைகளின் எண்ணிக்கை வேறுபடுவதேயாகும். 1969/70 ஆண்டு சமூக பொருளாதார சேவைச்கணிப்பின்படி 200 ரூபாவுக்கு குறைந்த வருமானமுள்ள குடும்பங்களிலேயே ஐந்து, ஆறு, குழந்தைகளுக்கு மேலிருப்பது அவதானிக்கப் பட்டது. சமூக மாற்றம், நடுத்தர வகுப்பின் எழுச்சி, நகராக்கம் மற்றும் நவீன மயமாக்குதலின் விளைவாக வேற்றுமை வளப் பண்பு இலங்கையில் மேலும் ஏற்படஇடமுண்டு.

இறப்பு:

1973—ல் இறப்பு விகிதம் 1000 க்கு 7·7 ஆக இருந்தது. இலங்கையில் இறப்பு விகிதம் 1940 ஆம் ஆண்டுக்காலங்களில் சடுதியான வீழ்ச்சி பெற்றது. 1944 ஆம் ஆண்டு மொத்தமாக இறந்தவர்களின் எண்ணிக்கை, 133,985 பேராக இருந்தது. இத் தொகை 1947-ல்

98,544 பேராக குறைந்தது. 1973-ல் 13·1 மில்லியன் மக்கள் மத்தியில் இறந்தவர்களின் எண்ணிக்கை 100,500 பேராக இருந்தது. இதிலிருந்து கடந்த 25 வருட காலப்பகுயில் இறப்பு விகிதத்தில் எத்தகைய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதைக் காணலாம். மலேரியா நோய் குறுகிய காலத்தில் கட்டுப்படுத்தப்பட்டதும், மற்றும் தொற்று நோய்களான கலாரா, அம்மை, நெருப்புக்காய்ச்சல், புளுக்காய்ச்சல் நிகழ்வுகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டமையும் இவ் இறப்பு விகித வீழ்ச்சிக்கு முக்கிய காரணிகளாகும். இக் காலப்பகுதியில் மருந்து, மருத்துவ வசதிகள் அதிகரிக்கப்பட்டதன் காரணமாக சுகாதார வசதிகளில் முன்னேற்றம் ஏற்பட்டது. பங்கீட்டு முறையில் உணவு விநியோகம் மேற்கொள்ளப்பட்டதால் மக்களின் தேக நலம் பரந்த அடிப்படையில் முன்னேற்றத்தைப் பெற்றது. பிரசவ, சிசு மரணங்களின் எண்ணிக்கையும் குறைவடைந்தது.

சிசு மரணம் 1973-ல் ஆயிரத்துக்கு 46·2 ஆக இருந்தது. இவ்வளவு 1910-22-இல் 187 ஆகவும், 1930-32இல் 165 ஆகவும் 1950-52 இல் 81 ஆகவும் 1960–62 இல் 54ஆகவும் குறைவடைந்து வந்துள்ளது. சிசு வைத்தியத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றங்களினலும் குழந்தை உணவு, குழந்தை விபத்து தடுப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்டதனலும் மரண வீழ்ச்சி யேற்பட்டன. தொண்டைக்கரப்பன், குக்கல், போலியோ போன்ற குழந்தைவருத்தங்கள் இப்பொழுது தடுப்பு முறைகளால் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளன. பிரசவ மரணத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியை நோக்கின் 1937–ல் ஆயிரத்துக்கு 20·1 ஆக இருந்து இது படிப்படியாக 1947–ல் 10.6 வும் 1950–ல் 5·7 வும் 1968-ல் 1·8 வும் குறைவடைந்துள்ளது. இறப்பு விகிதம் இனங்களுக்கிடையே வேறுபடுகின்றது. 1973–ல் 1000 க்கு இறப்பு விகிதம் சிங்களவர் 7·1 இலங்கைத் தமிழர் 8·6 இலங்கைத் சோனகர் 9·1 இந்தியத்தமிழர் 11·5 பறங்கியரும் யுரோசியரும் 8.1 விகிதமாகக் காணப்பட்டது.

குடியசைவு:

இலங்கையின் குடித்தொகையதிகரிப்பில் 1950–ஆம் ஆண்டு வரை குடியுள்வருகை முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. 19-ஆம் நூற்றுண்டில் ஏற்பட்ட பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் விளைவாக இந்தியாவிலிருந்து குடியுள்வருகை பெருமளவில் ஏற்பட்டது. குடியுள்வருகையும், குடிவெளியேற்றமும் பொருளாதார - அரசியல் நிலைமைகளுடன் இணைந்ததாகக் காணப்பட்டன. இலங்கை 1948-ல் சுதந்திரம் பெற்ற பின்பு குடியுரிமை, குடியுசைவு குறித்துப் பல சட்டங்கள், கட்டுப்பாடுகள் ஏற்படுத்தியதின் காரணமாகக் குடியுள்வருகை



மிகவும் குறைவடைந்தது. 1950-ஆம் ஆண்டின் பின்னர் குடியசைவில் வீழ்ச்சியே காணப்பட்டது. 1948–ஆம் ஆண்டுப்பிரஜாவுரிமைச் சட்டத்தினல் பெருமளவு இந்தியர் தாயகம் திரும்பினர். 1964, 1974 இலங்கை - இந்திய ஒப்பந்தங்களின்படி 600,000 இலங்கை வாழ் இந்தியர் இந்தியா செல்லவிருக்கின்றனர். இவர்களுள் 100,000, பேருக்கு மேல் ஏற்கனவே இந்தியாவுக்கு போய் விட்டார்கள். இவர்களைத் தவிர ஐரோப்பியர், யூரேசியர், பறங்கியர் ஆகிய இனத்தவர்கள் இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்குக் குறிப்பிடத்தக்களவு இடம் பெயர்ந்துள்ளனர். மேற்குறிப்பிட்டவர்களைத் தவிர படித்த, வளமுள்ள இலங்கையர்களின் குடியசைவு அண்மைக் காலத்தில் முக்கியமானதாகவுள்ளது. இவர்கள் தொழில் வாய்ப்பு, வளமான வாழ்வு, பிள்ளைகளின் கல்வி போன்ற காரணங்களுக்காகப் பெருமளவில் பிற நாடுகளுக்கு இடம் பெயருகின்றூர்கள். 1970–ஆம் ஆண்டுக்குப்பின்னர் 550,000 பேர் இலங்கையிலிருந்து பிற நாடுகளுக்குச் சென்றுள்ளனர். இத் தொகையில் நிரந்தரமாகவும், தற்காலிகமாகவும் வெளியேறினவர்களின் எண்ணிக்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் இடவசைவில் இரு முக்கிய போக்குகளை அடையாளம் காணக்கூடியதாக உள்ளன (i) ஈரவலயப் பகுதியிலிருந்து வரண்டவலையப் பகுதிக்கு மக்களின் இடப்பெயர்வு (ii) கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு மக்களின் இடப்பெயர்வு. 1931–ஆம் ஆண்டுக்காலத்திலிருந்து வரண்ட வலயப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நீர்ப்பாசன நிலஅபிவிருத்தி, விவசாய நடவடிக்கைகளின் விளைவாக மக்கள் செறிவான ஈரவலய மாவட்டங்கள், யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து அனுராதபுரம், பொல்லனறுவை, வவுனியா, அம்பாறை மொனருகலை போன்ற மாவட்டங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளார். யாழ்ப்பாணம், குருநாகல், மாத்தளை, மட்டக்களப்பு, கண்டி போன்ற மாவட்டங்களில் அபிவிருத்தியடைந்த பகுதிகளிலிருந்து விருத்தியடைந்து வரும் பகுதிகளுக்கு மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இதனல் இம்மாவட்டங்களில் எல்லை வலையம் விரிவடைந்தன. கிராம– நகர இடப்பெயர்வை நோக்கின் கொழும்பின் புற நகர்களும். வரண்ட வலையத்திலுள்ள நகர்களும், பிரதான மைய இடங்களும் குடித்தொகையசைவினல் குடிப்பெருக்கம் ஏற்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், காலி, மாத்தறை மாவட்டங்களிலிருந்து மக்கள் பிற மாவட்ட நகர்களுக்கு குறிப்பிடத்தக்களவு இடம் பெயர்ந்துள்ளனர். மகாவலி அபிவிருத்தி திட்டம் மற்றும் பல வரண்ட வலய நீர்ப்பாசன திட்டங்களின் விளைவால் மேலும் ஈரவலயப் பகுதிகளிலிருந்து வரண்டவலயம் நோக்கிய இடப்பெயர்வு ஏற்பட இடமுண்டு.

## குடித்தொகை முன்னீட்சிகள்

இலங்கையின் குடித்தொகை வளர்ச்சி குறித்து குடித்தொகை ஆய்வாளர்கள் வேறுபாடான கருத்துக்களைக் கொண்டுள்ளனர்.

அட்டவணை 4.

இலங்கைச் சனத்தொகை முன்னீட்சிகள் 1980 – 2000 வரை உயர், மத்திமம், தாழ் அடிப்படையில் காட்டப்பட்டுள்ளது.

| | உயர் தொகை (ஆயிரத்தில்) | மத்திமம் தொகை (ஆயிரத்தில்) | தாழ் தொகை (ஆயிரத்தில்) |
|---|---|---|---|
| 1980 | 15,555 | 15,443 | 13,891 |
| 1990 | 19,335 | 18,872 | 16,644 |
| 2000 | 24,034 | 23,835 | 20,912 |

மூலம்;– புள்ளிவிபர ஆண்டுப் புத்தகம் – 1970

குடித்தொகை முன்னீட்சைகளை நோக்கும் பொழுது மத்திம முன்னீட்சி ஓரளவு பொருத்தமாகவுள்ளது. இலங்கையில் ஏற்பட்டு வரும் சமூக மாற்றங்களும், குடும்ப கட்டுப்பாட்டு பிரச்சாரங்களின் விளைவாலும் பிறப்பு வீதம் எதிர்பார்த்ததிலும் கூடுதலாக வீழ்ச்சி ஏற்பட்டுவருவதைக் காணலாம். குடித்தொகை கட்டுப்பாடற்ற முறையில் பெருகுவதினால் சமூக – பொருளாதார பிரச்சினைகள் தீர்வு படாமல் மேலும் சிக்கலடைவதுடன் மூல வளத்திலும் பெரும் தாக்கத்தையும் ஏற்படுத்தலாம். இலங்கையில் குடிசனப் பெருக்கத்தை குறைப்பதற்கு குடும்பதிட்டமிடல் முறை மூலம் குடும்பஅளவை குறைப்பதே சிறந்த வழியெனக் கருதுகின்றனர். இன்று குடும்பத் திட்டமிடலுக்கு எதிர்ப்பு சர்வதேச அடிப்படையில் குறைவடைந்து வருவதை அவதானிக்க கூடியதாகவுள்ளது. இலங்கையில் ஐக்கியநாடுகள் சபையின் உதவியுடன் இலங்கை குடும்பதிட்டமிடல் சங்கம் குடும்ப திட்டமிடல் பற்றி பிரச்சாரம் செய்துவருவதுடன் அதற்கான உதவிகளையும் செய்து வருகின்றது. சர்வதேச தொழில் ஸ்தாபனம் இலங்கையில் குடும்பதிட்டமிடலை பரப்புவதில் ஈடுபட்டுள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியும், சமூக – நிதி, தொழில் வாய்ப்பு, வறுமை ஒழிப்பு, சம சந்தர்ப்பம் போன்றன குடும்பதிட்டமிடல் முறை மூலமே பெறமுடியுமென ஒரு பகுதியினர் கருத இன்னொரு பிரிவினர் கூடிய குடிசன வளர்ச்சியுடன் பொருளாதாரவளம் காணலாம் எனக் கருதுகின்றனர். மேலும் குடும்பதிட்டமிடல் சமூகத்தில் ஒழுக்கக்குறைவு, கடின உழைப்பை விரும்பாமை போன்றவற்றை ஏற்படுத்தலாம்



எனவும் கருதுகின்றனர். எல்லாவற்றையும் நோக்கும் பொழுது குடும்ப திட்டமிடல் குறைகளும் அதன் பலன்களும் சமூகத்திற்கு தெரிந்திருக்க வேண்டும். இது ஒவ்வொருவரும் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப தங்கள் குடும்பஅளவை அமைத்துக்கொள்ளவும் பொறுப்பான பெற்றோராக வாழவும் வழிவகுக்கும்.

குறிப்பு:– சென்ற இதழில்: குடித்தொகைத் தோற்றமும் வளர்ச்சியும், மாவட்டகுடித்தொகையும் அடர்த்தியும், குடித்தொகை மாற்றங்கள், கிராம, நகரவேறுபாடு எனும் பகுதிகள் வெளிவந்தன. இவை அவற்றின் தொடராகும். (ஆ–ர்)

ஆய்வு நூல்கள்: குடிசனக் கணிப்புகள் 1871 – 1971
சமூக / பொருளாதார கணிப்பு 1969/70

## வங்காள தேசத்தின்

## தற்போதைய நிலை

வங்காளதேசத்தில் மக்களின் வாழ்க்கை மேல் மட்டத்தில் கணிசமானளவு சாதாரணமானதாகவே காட்சியளிக்கிறது. ஆனால் பணவீக்கம், ஊழல், கள்ளக்கடத்தல், தொழிலாளர் அமைதியின்மை என்பன அடிக்கடி நம்பிக்கையற்ற நிலையினை ஏற்படுத்தும் அளவுக்கு நாட்டில் ஒரு ஆழமான பாதுகாப்பின்மை உணர்வினை ஏற்படுத்தியுள்ளது என்பதை தனிப்பட்ட உரையாடல்கள் மூலமோ வெளியான விவாதத்தினூடாகவோ ஒருவர் அறிந்து கொள்வதற்கு நீண்ட காலம் தேவைப்படாது. கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 24ம் திகதி பிரதம மந்திரியினால் மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கை இந்த துரதிர்ஷ்ட வசமான நிலைக்கு ஒரு நல்ல சாட்சியமாகும். லண்டனிலுள்ள வங்காள தேச தூதுவராலயத்தினால் மாதமிருமுறை வெளியிடப்படும் செய்தி ஏடான '' வங்களாதேஸ் இன்று '' ('' Bangladesh Today '' ) என்பதன் '' வாசகங்களில் குறிப்பிடுவதானால் '' அனுமதி வழங்கப் படாத ஆயுதங்களைக் கண்டு பிடிக்க கள்ளக்கடத்தலைத் தடுக்க சமூக எதிர்ப்பு, அரசை கவிழ்க்க முயல்கின்ற சக்திகள் என்பவற்றைக் கண்டு பிடிக்கவும், பதுக்கலையும் உணவுத்தானியங்

களிலும் மற்றைய அத்தியாவசியப் பொருட்களில் இலாபம் அடைவதைத் தடுக்கவும் நாடு முழுவதும் ஒரு முழுமையான நடவடிக்கையை மேற்கொள்ளவும் குடிசார் அதிகாரிகளுக்கு உதவ உடனடியாக இராணுவப் படைகளைச் செல்லுமாறு அவர் கட்டளையிட்டார்'' என்பதாகும்.

நகரங்களிலும் கிராமங்களிலும் வாழ்கின்ற எல்லாவிதமானதும், எல்லாநிலைகளிலும் உள்ள மக்களோடும் உரையாடிய போது தற்போதைய நிர்வாகத்தின் சாதனைகளை ஆதரிப்போர் மிகச் சிலரே இருந்தனர். உண்மையில் அங்கு சிலர் இந்நாடு பாகிஸ்தானின் ஒரு பகுதியாக இருந்த போது சில வழிகளில் – விடயங்கள் சிறப்பாக இருந்தது என்று சொல்வதற்குப் இவை பின்னிற்கவில்லை.

சுதந்திரத்தை அடுத்து உடனே இந்நிலை ஏற்படுவதற்குக் காரணம் என்ன? தேர்தலில் மிகப் பெரும் வெற்றியைப் பெற்ற ஒரு வருடத்துள் தேச பிதாவின் புருடத்துவம் என்னவாகிவிட்டது? தொடர்ந்தும் அவர் அதனைக்கொண்டிருந்தால் நாட்டை ஒழுங்கு முறைப் படுத்தி பாதுகாப்பு, புனர் நிர்மாணம், வளர்ச்சி என்ற பாதையில் திரும்பவும் கொண்டுவர ஏன் அதனைத் தாக்கமான முறையில் பயன் படுத்த முடியவில்லை. குறிப்பாக இளந் தலைமுறையினர் விடுதலைபெற்ற காலத்தின்போது வெளிப்படுத்திய தியாக மனப்பான்மை கடமை உணர்வு என்பன எங்கு போய் விட்டன.

நாட்டின் தீமைகளின் அடிவேராக பணவீக்கமே இருப்பதாகத் தெரிவதோடு அது உயர்வடைவதையிட்டு எவ்வித கண் காணிப்புகளும் மேற் கொள்ளப்படவில்லை. வாய்ப்பான ஏற்றுமதி கைத்தொழில்களிலிருந்து மூலவளங்களை திசை திருப்பியதன் மூலம் பாதகமான. வர்த்தக மாற்று வீத நிலை பங்காள தேசத்தில் அவதானிக்கக்கூடிய மற்றைய விடயங்களில் ஒன்றாகவுள்ளது. வெளிநாட்டு உதவியை மிக அதிகமாகப் பெறுதுவிடின் இத்தகைய பணவீக்கத்தை தீர்ப்பதற்கான ஒரே ஒரு தர்க்க ரீதியான வழி மாபெரும் சமூகக் கிளர்ச்சியாகவே அமையும். ஆனால் இதுதன்னளவிலேயே அரசாங்கத்தின் ஒழுங்கு, அரசியல் அதிகாரம் என்பவற்றை பலவீனப் படுத்திவிடும்.

வங்காளதேசத்தில் நிலவுகின்ற பண வீக்கத்தின் உள்ளடக்க அளவு பற்றிய தரவுகளில்லை. ஆனால் சில குறியீடுகள் உண்டு. 1-ம் 5 வருடத்திட்டத்தின்படி விடுதலை பெற்ற தினத்துக்கும் 1973 யூனுக்கு மிடையில் விலைகள் கிட்டத்தட்ட 80./° அதிகரித்துள்ளது எனத் தெரிய வருகிறது. பருவகாலக் காரணிகளை தவிர்த்து விடினும் சில அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் விலைகள் இதனை விட



மிக அதிகமாக உயர்ந்துள்ளன. அதிலிருந்து விலைகள்தொடர்ந்து கூர்மையாக அதிகரித்துவருகின்றன. உதாரணமாக கடந்தவருடம் ஏப்ரல், மே மாதங்களில் பகிரங்க சில்லறைச் சந்தையில் 1 சியர் (2 றாத்தல்) அரிசியின் விலை 4 ராசா Taka ஆக இருந்தது. ஆனால் 1973–ஆம் ஆண்டின் இறுதி அரைப்பகுதில் இது 2 Taka ஆகவே இருந்தது. பருவ கால காரணிகளைக் கவனத்தில் எடுக்க வேண்டியிருப்பினும் 1973 நவம்பர் டிசம்பர் மாத அறுவடை நிறைவினதாக இருந்தது என்பதையும் ஞாபகத்தில் கொள்ளல் வேண்டும். இதேகாலப் பகுதியில் மாட்டிறைச்சி 1 சியர் (2 றாத்தல்) 8 தொடக்கம் 10 Taka விலிருந்து 15 Taka வுக்கு உயர்ந்துள்ளது. சீனி 8 இலிருந்து 14 Taka வுக்கும் கடுகு, எண்ணெய் விலை 12 இருந்து 20 Taka வுக்கும் உயர்ந்துள்ளது. சில மாதங்களுக்கு முன்பு 40 Tak வுக்கு விற்ற பருத்திச் சேட் ஒன்று இப்போது 65 Taka வுக்கும், ஒரு லுங்கி 35 இல் இருந்து 60 க்கும் உயர்ந்துள்ளது

மிகவும் பழமைத்தன்மையான ஒரு மதிப்பீட்டின்படி ஒரு வருடத்துள் விலைகள் 50 /° ஆல் அதிகரித்துள்ளன எனத் தெரிய வருகிறது. சுதந்திரத்துக்குப் பின்வருள்ள ஒன்றரை வருடகால சாட்சியங்களைக் கொண்டுள்ள பார்க்கு மிடத்து இது கிட்டத்தட்ட ஒரு தொடர்ச்சியான பயம் தரக் கூடிய விகிதத்தையே பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இதனைக் கட்டுப்படுத்த முயற்சிக்கும் ஒட்டு மொத்தமானதொரு கொள்கை அரசாங்கத்திடம் இல்லை என்பது அதேயளவு பயம் தரக்கூடியதொன்றாகும். அதன் நடவடிக்கைகள் துண்டு துண்டானவை. ஒவ்வொன்றும் ஒரு தனிப்பட்ட தேவைகளின் பிரதித்தாக்கமாக தனிப்பட்ட பாகம் பாகமாக செய்யப்படுகின்றது. அதேவேளையில் அரசாங்கம் உயர்ந்த உணவு விலைகளுக்கு ஆதரவு தருகிறது. 1-வது 5 வருடத் திட்டத்தில் பிரசுரித்த அதன் அபிலாசையான விலைகளை உறுதியான தாக்குவோம் என்ற இலக்குக்கு மத்தியில் இதனையும் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது. 1972–இல் நகர்ப்புறங்களில் அரைகுறையான பங்கீட்டு முறையினை அறிமுகப் படுத்தியது. அது தொடர்ந்தும் இருந்து வருகிற அதே வேளையில் விவசாய உற்பத்தியாளர்களின் பொதுநலனை உயர்த்தும் கொள்கை பண வீக்கத்தைக் கட்டுப்படுத்தும் கொள்கையை விட கூடியளவு பயன் தரும் என அரசாங்கம் நம்புவதாகத் தெரிகிறது.

உண்மையில் உயர்ந்த உணவு விலைகளுக்கு ஆதரவளிப்பது பெரும்பாலான விவசாயிகளுக்கு உதவுமா என்பது ஐயத்துக்குரியதே. சந்தைப் படுத்தக் கூடிய உற்பத்தியில் மேலதிகத்தை உற்பத்தி செய்ய விளையும் எந்த ஒருவனும் அதற்கு ஏற்படக் கூடிய உள்வீ

டுகளின் செலவு காரணமாக, முதலிடவேண்டிய நிதியின் அவசியத்தை உணர்வான். அத்தோடு அதிகமான நிலமும் அவனுக்குத் தேவைப்படும் (வங்காள தேசத்தில் 45 ./· விவசாயிகள் இரண்டரை ஏக்கருக்கும் குறைவான நிலத்தையே கொண்டுள்ளனர் ) இப்போது நடைமுறையிலுள்ள சொத்தினை அடிப்படையாகக் கொண்ட கிராமியக் கடன் வசதி முறையின் கீழ் அரிசிக்கு வழங்கப்பட்டுள்ள உயர்ந்த விலையின் மூலம் நன்மை யடையலாம் என்பதில் விவசாயிகள் குறைந்தளவு நம்பிக்கையே கொண்டுள்ளனர். கடந்த காலங்களில் இவர்கள் எவ்வளவு சொத்துக்களைச் சேகரித்திருப்பினும் உள்ளீடுகளுக்கான மிக உயர்ந்த விலை காரணமாக இப்போது அது உறிஞ்சப் படுகிறது.

பட்டணங்களில் வாழும் இருப்பு வைத்திருப்பவர்களே உயர்ந்த விலைகளின் மூலம் நன்மையடைகிருர்கள். அத்தோடு பல இடங்களில் கட்சியின் ஆதரவாளர்களே இலாபம் பெறுவதில் முன்னிற்கிருர்கள். இத்தகைய இலாபங்களைக் கட்சி ஆதரவாளர்கள் பெறுவதற்கான இன்னெரு வழி அவர்களே இறக்குமதி செய்வதற்கான அனுமதிச் சீட்டை பெற்றுக்கொள்வதாகும். இவைகள் சில சமயங்களில் இறக்குமதி வியாபாரத்தில் ஈடு பட்டுள்ளவர்களுக்குத் திருப்பவும் விற்கப்படுவதால் இறக்குமதிப் பொருட்களின் விலை மேலும் உயர்கிறது. குறைந்த நேரடி வரி முறையின் கீழ் இத்தகைய இலாபம் பெறுபவர்கள் நுகர்வை நோக்காகக் கொண்ட வர்க்கமாக வளர்ச்சியடைந்துள்ளனர். 1972/73 வரவு செலவுத்திட்டத்தில் 9 ·/· மே மொத்தமாக வரிகளிலிருந்து பெற்ற வருமானமாயிருந்து. 1973/74 க்கான வரவு செலவுத் திட்டத்தில் இதில் சிறிதளவு மாற்றம் கொண்டு வருவதற்கான பிரேரணைகளே இருந்தன. அரசாங்கத்தைப் பொறுத்த வரை இந்த வரிக்கொள்கையே அதனை நடைமுறை — மூதற் செலவின் பெரும் பாகத்தை ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலைக் குள்ளாக்குகிறது என வாதிடமுடியும். இதற்காக மேற்கொள்ளப்படும் இலகுவான துண்டு வீழ் நிதிப்படுத்தல் பண வீக்கத்துக்கான இன்னெரு பலமான உந்து சக்தியாகிறது.

கூலிகளும் சம்பளங்களும் அங்கு உண்மையில் உயர்ந்துள்ளன மிகக் குறைந்த வேதனம் பெறும் தொழிலாளர்கள் இப்போது ஒரு மாதம் 175 taka பெறுகின்றனர் முன்பு இவர்கள் 130 taka தான் பெற்றனர். அதே வேளையில் அரசாங்கத்துறைக்கும் மற்றைய துறைகளுக்குமிடையே ஒரு சமமான உச்சவரம்பு ஒன்றும் நடைமுறையிலுள்ளது. அது 2000 taka உச்ச வருமான — உயர் சம்பளம் பெறுபவர்கள் வருமான வரி செலுத்துவதினின்றும் விலக்கப் படுவர் என விதிக்கிறது. ( இத்தகையோரின் கீழ் வேலைசெய்வோரே அதனை கட்டும்படி பொறுப்பாக்கப்பட்டுள்ளனர் ) இருந்தும் இவர்கள் கஷ்டப்படு



பவர்களாகவே உள்ளனர். இதுவே உத்தியோகத்தர் இரகசிய நடவடிக்கைகளான வேறு ஒருவர் பெயரில் வியாபாரங்களில் ஈடுபடுதல், நாட்டை விட்டு முதலை அனுப்ப உதவுதல் போன்றவற்றில் ஈடுபடுதல் என்ற கதைக்கு இடமளிக்கிறது.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமைக்கான மிகவும் முக்கிய காரணி இந்தியாவுடன் அது ஒரு திறந்த எல்லையைக் ( opew border) கொண்டிருப்பதாகும். அதே வேளையில் விலைகளிலும் வர்த்தக மாற்று வீதத்திலும் ஒரு உள்நாட்டுக் கட்டுப்பாட்டை பராமரிக்க முயற்சிக்கிறது. இது குளிர்காலத்தில் வீட்டு கதவுகளையும், யன்னல்களையும் திறந்து வைத்துக்கொண்டு வீட்டில் குளிர்கால நெருப்பு மூட்ட முயற்சிப்பது போன்றதாகும் (உ ... ம்) — பச்சைச் சணலுக்கான அரசாங்க விலை ஒரு மவுண்ட் ( Maund ) 60 taka ஆகும் ஆனல் ஒரு கள்ளக் கடத்தல் காரனின் கையாள் அதற்கு 80 taka கொடுக்கத் தயாராயிருப்பான். அதனை இந்தியாவுக்கு கொண்டு செல்ல 20 taka செலவாகலாம் இருந்தும் அதன் மூலம் பெரும் லாபம் அடையலாம் ஏனெனில் கள்ளக்கடத்தல் செலாவணி வீதம் 100 taka — 40 — 45 இந்திய லோகப்களாக இருப்பதேயாகும். இத்தகைய கள்ளக்கடத்தலுக்கு எதிரான காவல் நடவடிக்கைகள் நீண்டகாலமாக தாக்கமற்றதாக, இதனைத் தடுத்து நிறுத்தக்கூடியதாக இருக்கவில்லை.

இவைகள் இவ்வாறிருக்க வங்காளதேசத்தின் கைத்தொழில் இயலளவினை அதிகரிப்பதற்கு எவ்வித நேர்மையான முயற்சிகளும் எடுக்கப்படவில்லை என்பதே அதிசயமானதாகும். எண்ணெயின் விலை அதிகரிக்கப்பட்டதன் பின்பு ஏற்றுமதிக்கான ஒரு அவசரம் காணப்படுகிறது என்பது வரவேற்கத் தக்கது. ஆனல் பெருந்தொகையான கைத்தொழில்கள் இயங்குவதற்கு உதவிகளிலேயே தங்கியிருக்கும் நிலையினுல் எழும் பரவலான திறமையின்மைகளை நீக்குவதற்கு ஒன்றுமே செய்யப்படவில்லை. இது தேசிய மூலவளத்தினை மிகவும் மோசமான முறையில் பிழையாகப் பயன்படுத்தும் ஒரு நிலையாகும் இந்நிலைக்கு திறமையானதும், ஊழலற்றதுமான ஒரு நிர்வாகம் இன்மையும், தொழிலாளர் அமைதியின்மையுமே காரணமாகிறது. சணல் கைத்தொழிலிலும் மற்றைய தேசிய மயமாக்கப்பட்ட தொழில்களிலும் ஒரு வருடத்தில் லட்சக்கணக்கான taka க்கள் செலவிடப்படுகின்றது.

கடுமையான நடவடிக்கைகள் கடூழியமான முறையில் எடுக்கப்பட்டாருன் குறுகிய காலத்துள் இச் சூழ் நிலையை தணிக்கலாம் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. 50 ./· அல்லது 60 ./· தான் நாணய மதிப்பிறக்கம் செய்தல், இறக்குமதி பிரதியீட்டுக்கைத்தொழில்

களுக்கு நிவாரணமளித்தல், வருமானங்களிலும் இலாபங்களிலும் உயர்ந்தளவு வரி விதித்தல், துண்டு விழும் நிதிப்படுத்தலைக் கட்டுப் படுத்தல், இறக்குமதியை மிகக் கூடியளவுக்குக் கட்டுப்படுத்தல், கைத்தொழிலை தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்ய முயற்சி எடுத்தல் என்பனவாகும். ஆனால் தற்போதைய நிர்வாகத்துக்கு இத்தகைய கொள்கை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்குமா என்பது கேள்விக் குரியதாகும்.

நிர்வாகத்தின் அண்மைக் கால நடத்தைகளிலிருந்து இதனை அது ஏற்றுக்கொள்ளாது எனத் தெரிகிறது. பொருளாதார கெடுதல்களை வளர்க்கும், நேர்மையீனங்களை பொறுத்துக் கொள்வதற்கான வாய்ப் புகளை வழங்குவதிலுமே கட்சிக்கான ஆதரவு கட்டியெழுப்பப்படு வதோடு தொடர்ந்தும் பெறப்பட்டும் வருகின்றது. இத்தகைய வாய்ப்புகளையும், இலாபம் பெறுவதற்கான சந்தர்ப்பங்களையும் முழு மையாக இல்லாது செய்தல் நிர்வாகத்தைப் பொறுத்தரை அரசியல் அபாயங்களை உண்டு பண்ணும், அரைகுறையாக இவற்றை நிறுத்துதல் பொருளாதாரத்தைக் கட்டிக் காப்பதற்குப் போதுமானதையாய் இராது. இச் சூழ்நிலையை சரியாக்குவதற்கான ஒரே ஒரு வழி மாபெரும் ( நன் கொடைகள் ) உதவிகளைப் பெற்று அதனை விவேகமான முறையில் பயன்படுத்துவதேயாம்.

நன்றி: South ASIAN REVIEW
Vol 7, Number 4, July 1974.
மூலம்: K. U. AHMAD
தமிழில்தருபவர்: அ. சிவராசா, B. A. Hons (cey)

---

**1974-இல் குடிசன அதிகரிப்பு:**

| | இலங்கையில் | உலகத்தில் |
|---|---|---|
| ஒவ்வொரு செக்கனுக்கு | ... | 2·5 |
| ,, நிமிடத்திற்கு | ... | 146 |
| ,, மணித்தியாலத்திற்கு | 44 | 7320 |
| ,, நாளுக்கு | 1056 | 21 10 958 |
| ,, வருடத்திற்கு | 3,85,440 | 77,000 000 |



# நிலாவெளிப் பிள்ளையார் கோயிற் கல்வெட்டு

செல்லத்துரை குணசிங்கம், M. A. (Ccy?)

தமிழ்நாட்டு வரலாற்றிலே கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டின் பிற் பாதியிலிருந்து கி. பி. பதின்மூன்றும் நூற்றுண்டின் முற்பாதி வரை யுள்ள காலம் முன்னர் என்றுமில்லாதளவிற்குப் பல அம்சங்களிலும் சிறப்புமிக்க ஒரு காலப்பகுதியாகும். இக்காலம் சோழப் பெருமன்னர் காலம் என அழைக்கப்படும். சோழப்பேரரசில் மிகவும் வலிமை பெற்று விளங்கிய முதலாம் ராஜராஜனும் அவனது மகன் முதலாம் ராஜேந் திரனும் வகுத்துக்கொண்ட ஏகாதிபத்தியக் கொள்கையும் அதனோடு தொடர்பாக எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளும் பேரரசின் விரிவிற் கும் பொருளாதாரச் செழிப்பிற்கும், அமைதியான சூழ்நிலைக்கும் பண் பாட்டு அபிவிருத்திக்கும் உதவலாயின. சோழப்பெருமன்னர் ஆட்சிக்கு முன்னரேயே தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் இடையே பண்பாட்டுத் தொடர்புகள் ஏற்பட்டுவந்தன வெனினும் அத்தொடர்புகள் குறிப் பிடத்தக்களவில் அதிகரித்தமை சோழர் காலத்திலாகும். அதற்கான முக்கிய காரணம், ஈழம் முதன்முதன்முதலாகத் தமிழ்நாட்டு வம்சம் ஒன்றின் நேரடியான ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டு ஆளப் பட்டமை சோழப்பெருமன்னர் காலத்தில் என்பதே.

சோழர் காலத்தில் ஈழத்திற்கும் தமிழகத்திற்குமிடையிலான பண் பாட்டுத் தொடர்புகள் பற்றியறிவதற்கு நமக்குக்கிடைக்கும் இலக் கியச் செய்திகள் மிகக்குறைவாகும். இந்நிலையில் ஈழத்திற்கண்டு பிடிக்கப்பட்ட சோழர் காலச் சாசனங்களே இத்துறைவரலாற்றை யறியப் பெரிதும் உதவுவன. இவ்வாறு கிடைக்கும் சாசனங்களுள் ஒன்றை மிக அண்மைக்காலத்தில ( 1972–ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஒன்பதாம் திகதி) திருகோணமலை மாவட்டத்திலுள்ள நிலாவெளி என்னும் கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சாசனமாகும். இச்சாசனம் தரும் சில செய்திகளின் அடிப்படையில் இக்காலத் தமிழகத் தொடர் பினால் இலங்கையில் ஏற்பட்ட சில பாதிப்புக்களை எடுத்துக் கூறுவதே இச் சிறிய கட்டுரையின் நோக்கமாகும்.

சாம்பல்தீவுக் கிராமச் சபையின் முன்னாட் தலைவராக இருந்து தற்போது அச்சபையின் அங்கத்தவராக இருந்து வரும் திரு. நா. தம்பிராசா அவர்களின் பழைய சாசனங்களைத் தேடும் அயராத முயற்சியினால் இச்சாசனம் கண்டுபிடிக்கப்பட்டது. அவர் இச்சாசனத்தை முதன்முதலிற் கண்டுபிடித்ததோடு அதன் முக்கியத்துவத்தைப்பற்றிச் சம்பந்தப்பட்ட கோயில் அதிகாரிகளுக்கு எடுத்துக்கூறி அச்சாசனத்தின் மைப்பிரதியொன்றையான் எடுத்துக் கொள்வதற்கும் உதவினர். முன்பாகம் உடைந்த நிலையில், சாசனம் பொறிக்கப்பட்ட கல், கோயிலின் ( இக்கோயில் திருகோணமலை — முல்லைத்தீவு பிரதான வீதியிலிருந்து ஏறத்தாழ இருநூறு மைல் தொலைவில்உள்ளது ) உள்வளவிலுள்ள தீர்த்தக் கிணற்றுக்குப் படிக்கல்லாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. நமக்குக் கிடைத்துள்ள சாசனப்பகுதி 2 அடி 9 1/2 அங்குல நீளமும் 1 அடி 11 அங்குல அகலமும் கொண்டது. பதினான்கு வரிகளை உள்ளடக்கிய இப்பகுதி சில கிரந்த எழுத்துக்களோடு தமிழில் எழுதப்பட்டுள்ளது. இச்சாசனம், திருகோணமலையில் உள்ள மச்சகேஸ்வர முடைய மஹாதேவர்க்கு நிலவந்தமாக, உராகிரிகாம கிரிகண்ட கிரிகாம் என்ற இடத்தில் இருநூற்றைம்பத்துநாலுவேலி நிலம் ( ஏறத்தாழ 1710 ஏக்கர் ) சந்திரன், சூரியன் உள்ளவரை தானமாகக் கொடுக்கப்பட்டமையைப் பதிவு செய்வதற்காகப் பொறிக்கப்பட்டதாகும். இச்சாசனம் தரும் குறிப்புக்களின் உதவி கொண்டும் வேறு சில சான்றுகளின் உதவி கொண்டும், தானமாகக் கொடுக்கப்பட்ட நிலப்பகுதி வடக்கே திரியாயிலிருந்து தெற்கே ஆகக் குறைந்தது நிலாவெளி வரையுள்ள கடல் சார்ந்த பகுதியை உள்ளடக்கியிருந்தது எனக் கூறலாம்.

இன்று எவ்வாறு ‘ திருகோணமலை’ என்ற இடப்பெயர் வழங்கப்படுகின்றதோ அதே பெயர் எவ்விதமாற்றமுமின்றி ஏறத்தாழ ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் வழக்கில் இருந்தமையை அறிய இச்சாசனம் உதவுகின்றது. ‘ கோணமலை ’ என்ற பெயர் வழக்கிலிருந்தமையையறிய முற்பட்ட காலத்தேவாரப் பாடல்கள் சில உதவுகின்றபோதிலும் தற்போதய வடிவில் வழங்கும் ‘ திருகோணமலை, பற்றிய முதற் குறிப்பைத் தரும் சாசனம் என்றவகையில் நிலாவெளிப் பிள்ளையார் கோயில் கல்வெட்டுச் சிறப்புப் பெறுகின்றது. ஆயிரம் வருடங்களாக இப்பெயர் தனது உருவம் கெடாது வழங்கி வந்துள்ளமை கருத்திற்கொள்ளத்தக்கது. இவ்வாறு இப்பெயர் மாற்றமடையாது வழங்கி வந்துள்ளமை, அப்பகுதியில் இருந்து வந்த தொடர்ச்சியான தமிழ் குடியேற்றத்தையும், அக்குடியேற்றத்தின் பலத்தையும் காட்டுவதாகவே கொள்ளவேண்டும்.



இலங்கை வாழ் தமிழர் வரலாற்றிற் சோழர் படையெடுப்பும் அப்படையெடுப்பின் வெற்றியும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தின. அத்தகைய மாற்றங்களுள் ஒன்றாகக் குறிப்பிடத்தக்கது தமிழரின் குடித்தொகை அதிகரித்தமையாகும். படைவீரராகவும், வர்த்தகராகவும், கலைஞராகவும், பணியாளராகவும் பலர் சோழ ஆதிக்கத்தோடு தமிழ்நாட்டிலிருந்து ஈழம் வந்தபோது ஈழத்தமிழரின் குடித்தொகை குறிப்பிடத்தக்களவில் அதிகரிக்கலாயிற்று. இக்காலத்தில் ஏற்பட்ட தமிழ்க் குடிகளின் பெருக்கமே பிற்பட்ட பகுதியில் காலத்துக்குக் காலம் தமிழர் ஆதிக்கம் பெறவும் அரசைத் தோற்றுவிக்கவும் பலமளித்தது எனலாம். தென்கிழக்காசிய வர்த்தக நலனிற் பெரும் அக்கறை கொண்டிருந்த சோழர் ஈழத்தின் புவியியல் ஸ்தான முக்கியத்துவத்தை யுணர்ந்தவராய் அங்கு தம் அதிகாரத்தை நிலைநிறுத்த விரும்பினர். அவ்விருப்பின் விளைவாகவே சோழப்பேரரசின் ஒரு மாகாணமாக ஈழம் இணைந்தது. இந் நிலையில், ஈழத்தில் அதன் உட்பகுதியின் அமைதியான நிலைக்குப் பொலன்னறுவையே சோழர் தலைநகராகத் தேர்ந்திருந்தபோதிலும், திருகோணமலைத் துறைமுகம் தென்கிழக்காசிய வர்த்தக நடவடிக்கைகளுக்குகந்து சிறப்புப் பெற்றிருந்தமையால் வெளியுலக வர்த்தக நலன்குறித்துச் சோழரின் பெருங்கவனம் திருகோணமலையிலேயே காணப்பட்டது. இவ்வாறு திருகோணமலைப்பகுதி சோழரின் பெருங்கவனத்தை ஈர்த்தபோது அங்கிருந்த தமிழ்க்குடிகளின் எண்ணிக்கையும் குறிப்பிடத்தக்களவில் விரிந்தது என்றும் அவ்வாறு விரிந்த தமிழ்க்குடியேற்றமே திருகோணமலை தொடர்ந்து தமிழ்க்குடியேற்ற ஆதிக்கம் பெற்ற இடமாக இருத்துவர உதவியது என்றும் அதன் வழியே ‘திருகோணமலை என்ற இடப்பெயர் தனது உருவு கெடாது நிலைபெற்றுவந்ததெனவும் விளக்கலாம்.

ஏற்கனவே குறிப்பிட்டதுபோன்று சாசனம் கூறும் நிலத்தானத்தின் அளவு ( 254 வேலி = 1710 ஏக்கர் ) அத்தானம் அரசினாற் கொடுக்கப்பட்டதானம் எனக்காட்டுவதோடு சமகாலத்திலே தமிழ்நாட்டிலிருந்து இந்துக்கோயில்கள் பெற்ற நிலத்தானங்களையும் நினைவுபடுத்துகின்றது. இத்தகைய பெருமளவு நிலத்தானம் கொடுக்கப்பட்ட செய்தியைத் தரும் முதற் சாசனத்தகவல் இதுவாகும். தமிழ்நாட்டில் இக் காலத்தில் ஏற்பட்ட சில அபிவிருத்திகள் இவ்வாறு பெருமளவு நிலத்தானத்தை ஈழத்து இந்துக் கோயிலும் பெற்றுக்கொள்ள உதவியிருக்கலாம். அதனைச் சிறிது விரிவாகக் காணலாம். சங்கமருவிய காலப்பிற்பகுதியில் ஆரம்பமாகிப் பல்லவர் கால முழுப்பகுதியிலும் நடைபெற்றுக்கொண்டிருந்த பக்தியியக்கத்தின் பெருந்தாக்கத்தினைச் சோழர் காலத்திற் காணமுடிகிறது. இதனால் முன்னர் என்றுமில்லாதளவிற்கு மதத்திற்கும் அரசியலுக்கு மிடையிலான தொடர்பு

இறுக்கமடைந்து மத நிறுவனங்கள் அரசவம்சத்தவரிலிருந்து சாதாரண பொதுமக்கள் வரையிலான பலரது பெருமாதரவைப் பெற்றிருந்தன. சுருக்கமாகக் கூறுவதாக இருந்தால், அமைதியும் பொருளாதாரச் செழிப்பும் காணப்பட்ட சோழர் காலத் தமிழ் நாட்டில், பக்தியியக்கத்தின் பெருவிளைவினால் இந்துக்கோயில்கள் என்றுமில்லாதளவிற்குப் பொருளாதரவு பெற்றுச் சிறந்து விளங்கின எனலாம். இவ்வாறு தமிழ்நாட்டில் பக்தியியக்கம் கொடுத்த பெரும் சமயவுணர்வு சமகாலத்தில் ஈழத்திலும் பிரதிபலித்தது. தமிழ் நாட்டில் அமைத்ததுபோன்று சோழப் பெருமன்னர் ஈழத்திலும் பெருங் கோயில்களை அமைத்தது மாத்திரமன்றி ஏற்கனவே நிலைபெற்றுச் சிறந்து விளங்கிய கோயில்களுக்குப் பெருந்தானங்களையும் அளித்தனர்.

இச்சாசனத்தில் காணப்படும் நீர்நிலம், புன்செய் நிலம் போன்ற குறிப்புகளும் சிறிது ஆராயப்படத்தக்கவை. கடல் கடந்த வர்த்தக உறவுகளின் மூலம் பெரும் பொருள் சம்பாதிக்கக் கூடிய நிலையிற் சோழப் பெருமன்னர் காணப்பட்ட போதிலும் நாட்டின் பொருள் வளத்திற்கு நிலவருமானத்தின் முக்கியத்துவத்தை நன்குணர்ந்திருந் திருந்தனர். நிலங்களைப் பல நிலைகளிலே தரம் பிரித்தும் பல்வேறுபட்ட நில அளவு முறைகளை நடைமுறைப் படுத்தியும் நிலவருமானத்திற்கெனப் புறம்பானதொரு பகுதியை நிறுவியும் பரந்த நீர்ப்பாசனத்திட்டங்களை ஏற்படுத்தியும் நடவடிக்கைகளை மேற்கொண்டமையிலிருந்து இதனை அறியலாம். சோழமன்னர் ஈழத்தைக் கைப்பற்றித் தம்பேரரசின் ஒரு மாகாணமாக்கியபோது இலங்கையில் ஏற்பட்ட பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக நில வருமானத்திற் போதிய கவனம் செலுத்தினர் என்பதிலே தவறில்லை. அண்மையிற் கந்தளாயிற் கண்டுபிடிக்கப்பட்ட சோழ இலங்கேஸ்வரன் காலத்துச் சாசனத்தில் நீர்ப்பாசனம் சம்பந்தமாகச் சோழர் இலங்கையிற் சில நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்குச் சான்றுண்டு. நாம் இங்கு கவனிக்கும் நிலாவெளிச் சாசனத்திற்காணப்படும் நீர் நிலம் (நெற்பயிர் விளையும் நிலம்) புன்செய்நிலம் (நெல்தவிர்ந்த ஏனைய பயிர்கள் விளையும் நிலம்) பற்றிய குறிப்புகள் தமிழ்நாட்டு நிலப்பகுப்புமுறையை நினைவூட்டுகின்றன. தமிழ்நாட்டில் நிலங்கள், அவற்றில் விளைந்த பயிர்களின் தன்மை கொண்டு பிரிக்கப்பட்டபோது நன்செய் அல்லது நீர்நிலம், புன்செய் நிலம் எனப்பிரிக்கப்பட்டன. ஆகவே, சோழர் ஆட்சிக்காலத்தில், இலங்கையில் சோழர் எடுத்துக் கொண்ட பொருளாதார நடவடிக்கைகள் பற்றியறிய இக் குறிப்புகள் உதவுவதோடு தமிழகத்து வழக்குமுறைகள் சில ஈழத்திலும் பின்பற்றப் பட்டமையை அறியவும் இவை உதவுகின்றன.



நமது சாசனத்திற்காணப்படும் அளவு முறை, நிலத்திற்கான நான்கெல்லைகள், மகேஸ்வரர் பற்றியகுறிப்புகளும் ஈண்டு கவனித்தற்பாலன. தமிழ்நாட்டில் வழக்கிலிருந்த நில அளவீட்டில் ஆகக் கூடியதாக இருந்தது 'வேலி' என்ற அளவாகும். தமிழகத்திற் சோழப் பெருமன்னர் ஆதிக்கம் பெற்றதோடு இவ்வளவுமுறையும் பெருவழக்குப் பெற்றதோடு சோழப்பேரரசின் ஆதிக்கம் ஏற்பட்ட பிற இடங்கள் சிலவற்றிலும் இந்த அளவு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இத்தகைய இடங்களுள் ஒன்றே ஈழம். சோழர் ஆட்சி இலங்கையிலிருந்து மறைந்த பின்னரும் இந்த அளவு முறை வழக்கில் இருந்தது எனக்கொள்ள ஆதாரங்களுண்டு. இவ்வாறு ஈழத்தில் வழங்கப்பட்ட தமிழக அளவுமுறையும், தமிழகப்பண்பாட்டின் செல்வாக்கு ஈழத்தில் ஏற்பட்டமையையறிய உதவலாம்.



படம்: கல்வெட்டின் மைப்பிரதியைக் கட்டுரையாசிரியர் பெற்றுக் கொண்டிருக்கின்றார்.

கோயில்களுக்கோ பிற நிறுவனங்களுக்கோ நிலங்கள் தானங்களாகக் கொடுக்கப்பட்டபோது அந்நிலங்களின் நான்கெல்லைகளும் வரையறுக்கும் வழக்கம் சோழர்காலத்திலேயே பெரிதும் பின்பற்றப் பட்டது. சோழச் சாசனங்களில் "இவ்விசைத்த பெருநான் கெல்லையுளகப்பட்ட நிலம்" என்ற சொற்றொடர் அடிக்கடி இடம்பெறு

வதனைக் காணலாம். இதே சொற்றொடரை நமது நிலாவெளிக்கல் வெட்டிலும் காணலாம். அத்துடன் இச் சாசனத்தில் தான மாகக் கொடுக்கப்பட்ட நிலத்தின் நான்கெல்லைகளும் திட்டவட்ட மாக வரையறுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு நான்கெல்லைகள் வகுக் கும் முறையும் ஈழத்தில் ஏற்பட்ட சமகாலப் பண்பாட்டுத் தொடர் பின் விளைவென்றே கூறவேண்டும்.

தமிழகத்திற் சைவக்கோயில்களுக்குத் தானங்கள் வழங்கப்பட்ட போது அத்தானங்கள் 'மகேஸ்வரர்' எனப்பட்ட கோயில் அதிகாரி களின் பாதுகாப்பில் விடப்பட்டமையைக் காணலாம், மகேஸ்வரர் என்போர் பெற்றிருந்த நிலைபற்றியோ அவர்களுக்களிக்கப்பட்ட அதி காரங்கள் பற்றியோ திட்டவட்டமாக அறிய முடியாவிட்டாலும் கோயில் நிர்வாகத்திற் சிறப்பான நிலையை அவர்கள் பெற்றிருந் தார்கள் எனக் கொள்ளச் சான்றுகள் உள. நிலாவெளிச்சாசனத்தின் இறுதியில் "இது பன் மாகேஸ்வரர் ரக்ஷை" எனக் குறிப்பிடப்பட்டி ருப்பது கோயிலுக்குக் கொடுக்கப்பட்டதானம் மகேஸ்வரர் என்ற அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டமையைக் காட்டுவதாகும். ஆகவே ஈழத்துச் சமய நிறுவன நிர்வாகத்திலும் தமிழ் நாட்டுச் சமய நிறு வன நிர்வாக அமைப்பு முறை ஏற்படுத்தப்பட்டதெனக்கொள்ள நமது சாசனத்திற் காணப்படும் "மகேஸ்வரர் ரக்ஷை" என்ற சொற்றொடர் உதவுகின்றது.

சோழப்படையெடுப்பால் ஈழம் கைப்பற்றப்பட்டு அதன் பெரும் பகுதி ஏறத்தாழ எழுபத்தைந்து வருடங்களுக்குச் சோழர் பேரசின் நேரடி ஆதிக்கத்தின் கீழ் இருந்தபோது தமிழ்நாட்டிற்கும் ஈழத்திற்கு மிடையிலான தொடர்பு வெறும் அரசியற்றொடர்பாக மாத்திரம் இருக்கவில்லை யென்றும் தமிழ்நாட்டின் பண்பாட்டு அம்சங்கள் சிலவும் ஈழத்தில் இடம்பெற்றிருந்தன வென்றும் இதுவரை அவ தானித்தவற்றால் அறியலாம். இந்தவிதத்தில் இதுவரை ஈழத்திற் கண்டுபிடிக்கப்பட்ட சாசனங்களில் நிலாவெளிப் பிள்ளையார் கோயிற் கல்வெட்டும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெறுகின்றது.


சொந்த அச்சக வசதிகளோடு

தொடர்ந்து வெளிவருகின்றது,

தமிழமுது

(இலக்கிய இதழ்)

சரவணை, வேலணை.


## பாராளுமன்ற சனநாயக முறையில்

## எதிர்க் கட்சியின் பங்கு


என். பீ. எம். சைபுத்தீன்

B. A. Hons (Cey)


பாராளுமன்ற ஆட்சி முறை நிலவும் ஒரு நாட்டில் எதிர்க் கட்சி ஒன்று அத்தியாவசியமானதாகும். பிரித்தானிய இலங்கை, இந்தியா கனடா போன்ற பொதுநலவமைப்பைச் சேர்ந்த நாடுகளில் பாராளு மன்ற ஆட்சி முறை நிலவுகின்றது. அவ்வாறான ஆட்சி நிலவும் நாடுகளில் பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெற்ற கட்சி ஆட்சியதிகாரத்தைப் பெற்றுக் கொள்கின்றது. பிரித்தானியாவில் ஆட்சியதிகாரத்தைப் பெற்ற கட்சி மகாஇராணியின் அரசாங்கம் என்று அழைக்கப்படுகின்றது. அவ் வரசாங்கம் சரியான முறையில் ஆட்சி நடத்துகின்றதா என்பதைக் கவனிக்க ஒரு எதிர்க்கட்சி இருப் பதால் அது மகா ராணியின் எதிர்க்கட்சி என்று அழைக்கப்படு கின்றது மகாராணியின் அரசாங்கம் நடைபெறும் போது ஏன் மகா ராணியின் எதிர்கட்சி ஒன்று அவசியமாகின்றது என்ற கேள்வி எழு கின்றது. பிரித்தானியப் பாராளுமன்ற முறையின் படி மகாராணியின் அரசாங்கமும் நாடும் எதிர்க்கட்சியால் பாதுகாக்கப்படுகின்றது. அதனால் நாட்டின் காவல்நாயாகக் கடமை புரிய பிரித்தானியாவில் எதிர்க்கட்சி ஒன்று அவசியமாகின்றது. அதேபோன்று பாராளுமன்ற சனநாயக முறை நிலவும் ஏனைய நாடுகளிலும் எதிர்க்கட்சி அவசி யமாகக் காணப்படுவதால் அதன் பங்கு முக்கிய இடத்தைப் பெறு கின்றது.

பாராளுமன்ற சனநாயக முறை நிலவும் ஒரு நாட்டில் அரசாங்கக் கட்சியைப் போன்று எதிர்க்கட்சியும் முக்கிய இடம்பெறுகின்றது. பொதுமக்கள் அரசாங்கக் கட்சியைத் தெரிவு செய்யும் அதே வேளை எதிர்க்கட்சி ஒன்றையும் தெரிவு செய்ய வேண்டும். எதிர்க்கட்சி பல வீனமானதாகவும், அதன் அங்கத்தவர்களின் தொகை குறைவான தாகவும் இருப்பின் அதன் கடமைகளைச் சரியான முறையில் செய்ய முடியாது போய்விடும். அச்சந்தர்ப்பத்தில் அரசாங்கம் தான்தோன் றித் தனமாக நடக்க முயலலாம். தற்போது நாம் வாழும் இலங் கையில் அதே நிலை காணப்படுகின்றது. அதனால் அரசாங்கக் கட்சி யங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு கிட்டிய வகையில் எதிர்கட்சிஅங் கத்தவர்களின் எண்ணிக்கையும் அமைய வேண்டும். எனவே பலமான ஒரு எதிர்க்கட்சி இருந்தால் தான் பாராளுமன்ற சனநாயக முறை பாதுகாக்கப்படும்.

எதிர்க்கட்சியின் பிரதான கடமை அரசாங்கக் கட்சியை விமரிசனம் செய்வதாகும். எதிர்க்கட்சியில் அரசாங்கக் கட்சியை எதிர்ப்பவர்கள் இருப்பதால் அரசாங்கக் கட்சி கொண்டுவரும் முறிகளில் காணப்படும் குறைநிறைகளை எடுத்துக்காட்ட முடியும். அரசாங்கக் கட்சி முறிகளைச் சமர்ப்பிக்கும் போது தனது அதிகாரத்தை நிலை நாட்டவே முயற்சி எடுக்கும். அவ்வாறான நிலையில் நாட்டின் எதிர்காலத்தைப் பாதிக்கும் விடயங்களைச் சமர்ப்பிக்கவும் இடமுண்டு அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவற்றை எதிர்த்து அரசாங்கத்தை நேர்வழிப்படுத்துவதே எதிர்க்கட்சியின் கடமையாக இருக்கவேண்டும்.

எதிர்க்கட்சியின் விமரிசனம் செய்யும் கடமை என்பதிலிருந்து அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களுக்கு முட்டுக் கட்டையாக இருத்தல் என்று பொருள் படுவதில்லை. நாட்டை ஆளும் பொறுப்பு அரசாங்கக் கட்சிக்கே வழங்கப்பட்டுள்ளது. எனினும் அவ்வாறான அதிகாரத்தைப் பொதுமக்கள் எதிர்க்கட்சிக்கு வழங்குவதில்லை. ஆயினும் தமது கருத்துக்களைத் தெரிவிக்கும் அதிகாரத்தை எதிர்க்கட்சி பெற்றுள்ளது. அரசாங்கம் எதிர்க்கட்சிக்குச் செவிசாய்க்கக் கட்டுப்பட்டுள்ளது. அரசாங்கக் கட்சி தனது கொள்கைகளை நடைமுறைப்படுத்தும்போது தேர்தல் காலங்களில் பொதுமக்கள் முன் வைத்த வாக்குறுதிகளின் அடிப்படையில் கருமமாற்ற வேண்டும். அரசாங்கம் எதிர்க்கட்சியின் கருத்துகளை ஏற்கவில்லையென்று எதிர்க்கட்சி அரசாங்கத்துடன் முரண்படக் கூடாது. எதிர்க்கட்சி அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை ஏற்படுத்தினால் பாராளுமன்ற சனநாயக முறை பாதுகாக்கப்படும் என்று கூற முடியாது. எதிர்க்கட்சி எப்போதும் அரசாங்கத்துக்கு முட்டுக்கட்டையாக இருப்பின் அரசாங்கம் சர்வாதிகாரியாக நடக்க முயலலாம். அதனால் அரச எதிர்க்கட்சி அரசாங்கத்தை முட்டுக்கட்டையாக இருக்காது அதனை வழிப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

எதிர்க்கட்சி அரசாங்கத்தை விமரிசனம் செய்யும் போது ஒரு கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் அதனைச் செய்ய வேண்டும். எதிர்க்கட்சியின் விமரிசனம் அரசாங்கத்துக்கும் நாட்டுக்கும் நன்மை பயப்பதாக இருக்க வேண்டும். நடைமுறைப் படுத்தக் கூடியகொள்கையின் அடிப்படையில் விமரிசனம் செய்தால்தான் அது அரசாங்கத்துக்கும் நாட்டுக்கும் நன்மை பயப்பதாக அமையும். நடைமுறைப் படுத்த முடியாத விமரிசனங்களைச் செய்தல் எதிர்க்கட்சியின் கொள்கையாக இருக்கக் கூடாது. அரசாங்கத்தின் நடவடிக்கைகளை விமரிசனம் செய்யும் போது எதிர்க்கட்சி தான் முன்வைக்கும் கொள்கைகளைத் தான் அதிகாரத்துக்கு வந்தால் அவற்றை நடைமுறைப்படு



த்தும் சக்தியைப் பெற்றிருக்க வேண்டும். மற்றவர்களில் குறைகாண்பது எளிதான விடயமாகும். எனினும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழியைக் காட்டுவது மிகவும் கடினம். எதிர்க்கட்சியிடமிருந்து இந்தக் கடினமான கடமையையே எதிர்பார்க்கப்படுகின்றது.

எதிர்க்கட்சியில் பல சிறிய அரசியற் கட்சிகள் இடம் பெற்றிருப்பின் ஒரு பொதுக்கொள்கையின் அடிப்படையில் விமரிசனம் செய்வது கடினமாகும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் பலமற்ற சில கட்சிகள் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையிடும் வகையில் அரசாங்கத்தை எதிர்த்து நிற்கலாம். அதனால் எதிர்க்கட்சி பல விமரிசனங்களையும், கொள்கைகளையும் முன்வைக்கும் போது அவற்றுள் எவை சிறந்தவை? எவை கூடாதவை? எவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்? எவற்றை ஏற்றுக் கொள்ளக்கூடாது அரசாங்கத்தால் நிச்சயித்துக் கொள்வது கடினமாகும். அதனால் எதிர்க்கட்சி பலம் வாய்ந்ததாகவும், கூட்டுப் பொறுப்புடையதாகவும் இருந்தால்தான் செய்யும் விமரிசனங்கள் நன்மைபயப்பனவாக அமையும்.

எதிர்க்கட்சி அரசாங்கத்தை விமரிசனம் செய்யும்போது ஒரு நிழல் மந்திரிசபையாகச் ( SHADOW CABINET ) செயல்படவேண்டும். அதாவது கபினட்டின் ஒவ்வொரு அமைச்சரினதும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி அவற்றைப்பற்றி அறியும் வகையில் எதிர்க்கட்சியில் உளவாரியாக ஒரு மந்திரிசபை இருப்பது அவசியமாகும். அதன் மூலம் நன்மைபயக்கும் விமரிசனங்களைச் செய்ய முடிவதுடன் எதிர்க்கட்சியினர் தமது எதிர்கால நிருவாகத்துக்கான அனுபவத்தையும் பயிற்சியையும் பெற வாய்ப்பாக அமையும்.

எதிர்க்கட்சி ஒன்று இருப்பதால் நாட்டில் காலத்துக்குக் காலம் தோன்றும் பிரச்சினைகளை அரசாங்கத்துக்கு எடுத்துக் காட்ட முடிவதுடன் அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கைகளையும் அறிந்து கொள்ளலாம். இதற்காக மக்கள் பிரதிநிதிகள் சபையின் கேள்வி நேரத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அச்சந்தர்ப்பத்தில் பல கேள்விகளை கேட்பதன் மூலம் அரசாங்கத்தையும் மக்களையும் விழிப்புறச் செய்யலாம்.

பாராளுமன்ற சனநாயகமுறையில் பொதுஜன அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதற்குரிய சிறந்த சாதனம் எதிர்க்கட்சியாகும். அரசாங்கம் ஏதாவது ஒரு முறியைச் சமர்ப்பிக்கும் போது அது சம்பந்தமான விபரங்களை மக்களுக்கு எடுத்துக்காட்டி மக்களின் விருப்பையும் கருத்துக்களையும் அறிந்து கொள்ளலாம். அதுமட்டுமன்றி மக்களின்

விருப்பைத் தம்பக்கம் இழுத்துக்கொண்டு அரசாங்கம் சமர்ப்பிக்கும் மறி பிழையானது என்று அரசாங்கத்துக்கு எடுத்துக் காட்டலாம். அதன்மூலம் நாட்டின் பொதுஜன அபிப்பிராயம் அரசாங்கத்துக்கு எதிரானதாக அமையின் குறிப்பிட்ட மறியில் திருத்தம் கொண்டு வர வேண்டும் அல்லது காலதாமதம் செய்யவேண்டிய நிலை ஏற்படும். எனவே அரசாங்கத்தை நேர்வழிப்படுத்தும் நோக்குடன் எதிர்க்கட்சியின் மூலம் பொதுஜன அபிப்பிராயத்தை அரசாங்கத்துக்கு எதிராக ஏற்படுத்தலாம்.

அரசாங்கம் முன்வைக்கும் எல்லா மறிகளையும், கொள்கைகளையும் எதிர்த்து நிற்பது எதிர்க்கட்சியின் கடமையாக இருக்கக்கூடாது. மாருக நாட்டின் பொது நலனுக்கு அவசியமான மறிகளைச் சமர்ப்பிக்கும் போது அவற்றை ஆதரிப்பது எதிர்க்கட்சியின் கடமையாக இருக்கவேண்டும். எல்லா மறிகளையும் விமரிசனம் செய்வதால் அல்லது எதிர்த்து நிற்பதால் எதிர்க்கட்சியின் முக்கியத்துவம் குறைந்துவிடும். அவ்வாருன மறிகளை அரசாங்கம் அசட்டை செய்துவிடலாம். சில சந்தர்ப்பங்களில் அரசாங்கத்துடன் ஒன்று சேர்ந்து கடமை ஆற்ற வேண்டிய நிலையும் ஏற்படலாம். நாடு யுத்தம் ஒன்றை அல்லது பலத்த பொருளாதாரப் பிரச்சினையை நோக்கியிருக்கும் சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தை விமரிசனம் செய்வது அரசாங்கத்துக்கு மட்டுமன்றி முழு நாட்டுக்கும் பங்கம் விளைவிப்பதாக அமையலாம். அவ்வாருன சந்தர்ப்பங்களில் எதிர்க்கட்சி அரசாங்கத்துடன் ஒன்று சேர்ந்து கடமையாற்ற வேண்டும். உதாரணமாக 2-ஆம் உலக யுத்தகாலத்தில் பிரித்தானியாவில் அந்நிலை காணப்பட்டது. திரு. டட்லி சேனநாயக்காவின் இறப்புக்கு முன்பு தற்போதைய எமது எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜயவர்தன, நாடு எதிர் நோக்கியிருக்கும் பலத்த பொருளாதாரப் பிரச்சினையின் காரணமாக அரசாங்கத்துடன் ஒன்று சேர்ந்து கடமையாற்ற வேண்டும் என்று கூறியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எதிர்க்கட்சி தனது விமரிசத்தின் மூலம் அரசாங்கத்தை அதிகாரத்திலிருந்து வீழ்த்திவிட்டால் அது ஒரு மாற்று அரசாங்கத்தை அமைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இருகட்சிமுறை வளர்ந்திருக்கும் பிரித்தானியாவில் அந்நிலை சாத்தியமாகலாம். எனினும் இரு கட்சி முறை வளர்ச்சியடையாத நாடுகளில் அந்நிலை சாத்தியமாகாது. இலங்கையில் பல கட்சி முறை காணப்படுவதால் எதிர்க்கட்சியில் பல அரசியற் கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இடம் பெறுகின்றனர். அவர்கள் அனைவரும் ஒருமுகப்பட்ட ஒரு குழுவாக இடம்பெருமையால் பதவியிலிருக்கும் அரசாங்கம் வீழ்ந்தால் பதிலாக



ஒரு மாற்று அரசாங்கத்தை அமைக்க முடியாது. சிலவேளை எதிர்க்கட்சியால் அரசாங்கத்தை வீழ்த்தக் கூடியதாக இருந்தாலும் அடுத்த அரசாங்கத்தை அமைக்கக்கூடிய பலத்தை இலங்கை எதிர்க்கட்சிகள் இதுவரை பெறவில்லை. உதாரணமாக 1964-ஆம் வருடத்தில் அரசாங்கக் கட்சிப் பிரதிநிதிகளுக்குக் கிட்டிய வகையில் எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளும் காணப்பட்டனர். எனினும் 70 பேர்களைக் கொண்டிருந்த எதிர்க்கட்சியில் பலம் வாய்ந்த கட்சியில் 30 பேரே காணப்பட்டனர். அதனல் 1964—ஆம் வருடத்தில் அரசாகம் வீழ்க்தப்பட்டாலும் எதிர்க்கட்சியால் ''மாற்று அரசாங்கம்'' ஒன்றை அமைக்க முடியாது போய்விட்டது.

எதிர்க்கட்சியின் கடமை வெற்றியளிக்க வேண்டுமாயின் அரசாங்கக் கட்சிக்கும், எதிர்க்கட்சிக்குமிடையில் நெருங்கிய தொடர்பு காணப்பட வேண்டும். இது பற்றி சேர். ஐவர் ஜெனிங்ஸ் பின்வருமாறு கூறுகின்ருர். '' எதிர்க்கட்சியும் அரசாங்கமும் ஒன்றுபடுவதன் மூலமே பாராளுமன்ற ஆட்சிகள் நடைபெறுகின்றன. பெரும்பான்மைக் கட்சி ஆட்சிபுரிய வேண்டும் என்று சிறுபான்மைக் கட்சி ஏற்றுக் கொள்ளும் அதே வேளை சிறுபான்மைக் கட்சி விமரிசனம் செய்ய வேண்டும் என்று பெரும்பான்மைக் கட்சி ஏற்றுக் கொள்கின்றது. பொறுமையில்லாவிட்டால் பாராளுமன்ற ஆட்சி முறை அழிந்துவிடும்.

சில வேளை எதிர்க்கட்சியுடன் கலந்தாலோசனை செய்து முக்கிய பிரச்சினைகள் சம்பந்தமாக ஒரு உடன்பாட்டுக்கு வருவதன் மூலம் ஆட்சியைச் சிறப்பாக நடத்தலாம். குறிப்பாகத் தேசியப் பிரச்சினைகளின் போது இந்த வழிமுறையை மேற்கொள்வது பொருத்தமுடைத்து. கடந்த இரு உலக யுத்தங்களின் போது அந்நிலை பிரித்தானியாவில் காணப்பட்து.

அரசாங்கம் கொண்டுவரும் எல்லாத் தீர்மானங்களையும் எதிர்க்கட்சி விமரிசனம் செய்யாது இருப்பது போலவே அரசாங்கமும் எதிர்கட்சி கொண்டுவரும் எல்லாத்தீர்மானங்களையும் அசட்டை செய்யாது இருக்க வேண்டும். நாட்டுக்கு நன்மை பயக்கும் ஒரு மறியை யார் சமர்ப்பித்தாலும் அதை ஏற்றுக்கொள்வது சட்டத்துறையின் கடமையாக இருக்க வேண்டும். எதிர்க்கட்சியால் கொண்டுவரப்படும் சிறந்த மறிகளை ஏற்பது அரசாங்கத்துக்கு ஏற்படும் தோல்வி என்று கருதக் கூடாது. இவ்வாருன சந்தர்ப்பங்களில் எதிர்க்கட்சியுடன் உடன்பாட்டுக்கு வந்து அச்சட்ட மறியை அனுமதிப்பதன் மூலம் அரசாங்கத்தின் கௌரவமும் பாதுகாக்கப்படும்.

எனவே மேற்கூறியவற்றைப் பார்க்கும்போது அரசாங்கக் கட்சி நாட்டை ஆளுவதற்காகவே இருக்கிறது என்றும் எதிர்க்கட்சி அரசாங்கத்தின் நடவடிக்கைகளை ஆராய்வதற்காகவே கடமையாற்றுகிறது என்றும் தெரிகின்றது. குறிப்பாக எதிர்க்கட்சியின் பங்கு அரசாங்கத்தை எதிர்ப்பதாக அமையாது அதனை வழிநடத்துவதாக அமைய வேண்டும். இரு கட்சியினரும் தனிப்பட்ட முறையில் எதிரிகளல்லர். அரசாங்கக் கட்சியினர் எதிர்க்கட்சியினரைத் தமது எதிரிகள் என்றே கருதக்கூடாது. இரு கட்சியினருக்கும் இடையில் அரசியற் கொள்கைகளில் முரண்பாடுகள் காணப்பட்டாலும் ஒருவருக்கொருவர் நம்பிக்கையுடனும், நல்லெண்ணத்துடனும் கருமமாற்ற வேண்டும். அப்போதுதான் பாராளுமன்ற ஜனநாயக முறை வெற்றிகரமாக இயங்கமுடியும்.

## உங்கள் கவனத்திற்கு

அகிலம் முதல் இதழுக்குக்கிடைத்த வரவேற்பிலிருந்து, தமிழ் மக்களிடையே ஒரு சமூக அறிவியல் ஏட்டின் தேவை பெருமளவில் இருந்துள்ளமை தெரிகின்றது. இத்தேவையினை அகிலம் தொடர்ந்து நிறைவுசெய்ய உறுதிகொண்டுள்ளது. பலர் முதல் இதழ்தேவையென எழுதுகின்றனர். அவ்விதழ் கைவசமின்மையால் இதனை நிறைவு செய்யமுடியாமைக்கு வருந்துகின்றோம். எனினும் இவர்கள் தேவையினை ஓரளவு நிறைவுசெய்யவேண்டி, இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள பொதுசன நூல்நிலையங்களுக்கு அகிலம் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இனி 'அகிலம்' பிரதிகள் உங்களுக்குத் தவறாது கிடைக்கவும், அதற்கு உங்கள் ஆதரவை வழங்கவும் உடன் சந்தாதாரர் ஆகுங்கள், முடியுமாயின் உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

தரமான, பொருட்செறிவுள்ள, ஐந்துபக்கங்களுக்குட்பட்ட இலகுதமிழ்க்கட்டுரைகளை அகிலம் எவரிடமிருந்தும் வரவேற்கின்றது. கட்டுரை எழுத எம்மவர்கள் தயக்கம்காட்டுவது வேதனை தருகின்றது. தமிழில் சமூக அறிவியல் பயிலும் மாணவர்களுக்குச் சொல்லளவிலன்றிச் செயலளவிற் சேவையாற்றச் சிறிது முயன்றால் என்ன?

அகிலத்தைப்பற்றிப் பலர் எழுதியிருந்தனர் இவற்றிலிருந்து பல அபிப்பிராயங்களும், ஆலோசனைகளும் பெறமுடிந்தது. பத்திரிகைகளில் விமர்சனங்கள் வெளிவந்தன. ஒரு நாளேடு '' அகிலம் '' தலையங்கத்தை மறுபிரசுரம் செய்துமிருந்தது. ஆதரவுதந்த — தரவிருக்கும் அனைவருக்கும் எம்நன்றி.

வணக்கம்.

— ஆசிரியர்.